Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 10 2024

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 10, 2024 | ஒளி: 10 கதிர் 047 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# “இனவாதத்தை விதைக்க முயற்சிக்க வேண்டாம்”




**ரணில் விக்ரமசிங்க வடக்கிற்கு சென்று தமிழ் மக்களை அச்சுறுத்தியதாகக் கூறுகிறார்**

**அரசியல் மேடையில் திரிபுபடுத்தி பொய் பிரசாரம் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும்**

இலங்கையில் இதுவரை காலமும் இரு பக்கத்திற்குப் பரிமாறிக் கொண்டிருந்த அரசியல் அதிகாரம் இந்த செப்டெம்பர் 21ஆம் திகதி முற்றுப்பெறுவது நிச்சயமாகி விட்டது. இதன் காரணமாகப் பகைவர்கள் அனைவரும் அரசியல் வாதங்களுக்குப் பதிலாகப் பொய்யான குறைகூறல்கள், திரிபுபடுத்தல்களை பாரியளவில் பிரசாரம் செய்த வருகிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தோழர் வசந்தவையும் தோழர் மகிந்தவையும் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் பணிப்புரை விடுத்ததாகக் கடந்த 06ஆம் திகதி பிரசாரமொன்று மேற்கொள்ளப்பட்டது. நீதிமன்ற பணிப்புரையொன்றை திரிபுபடுத்தியமை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம். இயன்றளவில் எமக்கு கோரிக்கை கடிதம் அனுப்பிவைத்தல், முறைப்பாடுகள் செய்தல் குறைவின்றி இடம்பெற்று வருகின்றது என்றார்.

கம்பனிகளுக்கு இடையிலான ஊழியர் சங்கத்தின் 25ஆவது மாநாடு மாளிகாவத்தை பி.டீ.சிறிசேன விளையாட்டரங்கில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# நெல்லின் விலை உயர்வு



நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்ததன் பின்னர் சந்தையில் நெல் விலை அதிகரித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நெல்லை கொள்வனவு செய்வதற்கு 6,000 மில்லியன் ரூபாயை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அந்த அமைச்சு கூறியுள்ளது.

இந்த திட்டத்தில் முதற்கட்டமாக 500 மில்லியன் ரூபாய், சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## அரச ஊழியர்களின்

# விடுமுறைக்கு புதிய வழிகாட்டல்

விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற நிலையில், நாடு திரும்பும் அரச ஊழியர்களுக்கான புதிய வழிகாட்டல்களை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

ஊழியர்கள் தமக்கான விடுமுறை கால எல்லை முடிந்த பின்னர், திட்டமிட்ட திகதியில் கடமைக்கு திரும்பவில்லையெனில், தாமகவே பதவியிலிருந்து விலகியவர்களாக கருதப்படுவார்கள் என அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# சஜித்துக்கு கீதா ஆதரவு



மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, கண்டியில் திங்கட்கிழமை (09) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் மேடையில் ஏறி, ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தார்.

# கடவுச்சீட்டுக்களை கண்காணிக்க போலாந்துக்கு விஜயம்




கடவுச்சீட்டுகள் தயாரிக்கும் செயல்முறையை ஆராய்வதற்காக குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் போலந்து நாட்டுக்கு சென்றுள்ளனர்.

இ-பாஸ்போர்ட் முறைமை மற்றும் வெற்று கடவுச்சீட்டுக்களின் பற்றாக்குறையால் கடந்த சில நாட்களாக குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் அலுவலகத்துக்கு முன்பாக நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன.

அத்துடன், இணையம் ஊடாக, கடவுச்சீட்டுக்குப் பதிவு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, புதிய வெற்றுக் கடவுச்சீட்டுக்களை அச்சடிக்கும் ஒப்பந்தம் வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இந்த நிலையில்,குறித்த புதிய வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளின் கையிருப்பு ஒக்டோபர் 25ஆம் திகதி இலங்கைக்கு கிடைக்கப்பெறும் என திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# இந்திய-இலங்கை பயணிகள் கப்பல் சேவையில் மாற்றம்




தமிழ் நாட்டின் நாகபட்டிணத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு நடத்தப்படும் பயணிகள் கப்பல் சேவை மேலும் ஒரு நாளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆகஸ்ட் 16ஆம் திகதி ஆரம்பித்த, இந்த சிவகங்கை கப்பல் சேவை நாளாந்தம் நடைபெற்று வந்த நிலையில், குறைந்த பயணிகளின் வருகை காரணமாக செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் கப்பல் போக்குவரத்து சேவை மட்டுப்படுத்தப்பட்டு கிரமமாக நடத்தப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி P2

## எல்பிட்டிய தேர்தல்

# வேட்பு மனு தாக்கல் ஆரம்பம்

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் திங்கட்கிழமை (09) முதல் ஆரம்பமாகியுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வேட்பு மனுக்களை காலி மாவட்ட செயலகத்தில் செப்டெம்பர் 12ஆம் திகதி நண்பகல் 12:00 மணி வரை சமர்ப்பிக்க முடியும்.

தொடர்ச்சி P2



# பட்டாசு வெடித்ததில் ஆறு பொலிஸார் காயம்

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக பேரணி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஆதரவாளர்கள் பெருந்தொகையான பட்டாசுகளை திங்கட்கிழமை (09) பிற்பகல் வெடித்ததில் ஆறு பொலிஸார் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டத்தைப் பாதுகாப்பதற்காக நிறுத்தப்பட்ட பொலிஸார் அறுவர் உட்பட இரண்டு பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

விபத்து இடம்பெற்றபோது கடமையிலிருந்த ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# “மீனவர்களை மீடக உறுதியான தூதரக முயற்சிகள் அவசியம்”

## வெளியுறவு அமைச்சருக்கு தமிழக முதல்வர் கடிதம்



இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தொடர்ச்சி P2

# வாக்காளர் அட்டை தடையாக இருக்காது

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லும்போது, தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமாக இருந்தால், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாதது பாதிப்பை ஏற்படுத்தாது என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2


# நட்டஈட்டை செலுத்தினார் பூஜித் ஜயசுந்தர



2019ஆம் ஆண்டும் ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பான வழக்கில், பாதிக்கப்பட்ட தரப்பினருக்குச் செலுத்துமாறு உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட 75 மில்லியன் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர செலுத்தியுள்ளார்.

அவர், கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி அந்த தொகையைச் செலுத்தியுள்ளதுடன், முழுத் தொகையையும் 8 தவணைகளில் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

தொடர்ச்சி P2



## கடல் மார்க்கமாக கடத்தப்பட்ட

# ரூ.15 பில். பெறுமதியான போதைப்பொருட்கள் மீட்பு

கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்ட சுமார் 15,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் சனிக்கிழமை (08) வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 15,491 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "இனவாதத்தை விதைக்க முயற்சிக்க வேண்டாம்"



நீதிமன்றம் தொடர்பில் பொய்யான கூற்றுகளை வெளியிடுதல் சம்பந்தமாக சட்டத்தரணிகளின் மேலங்கிகளைக்கூட கழற்றமுடியும். நாங்கள் நீதிமன்றத்தின் முன் அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். அரசியல் மேடையில் இந்த திரிபுபடுத்தல்களையும் பொய் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதையும் இப்போதாவது நிறுத்தவேண்டும் என்றார்.

றவூப் ஹக்கீம், திஸ்ஸ அத்தநாயக்க போன்றவர்களுக்கும் கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. திஸ்ஸ அத்தநாயக்க மன்னிப்பு கோரினாலும் வழக்கத் தொடுக்கக்கூடிய அளவில் போலியாவணம் புனைவதில் பிறவித்திறமை கொண்டவராக மாறியிருக்கிறார். அதைப்போலவே ரணில் விக்ரமசிங்க வடக்கிற்கு சென்று தமிழ் மக்களை அச்சுறுத்தியதாகக் கூறுகிறார். அதற்காக மன்னிப்பு கோர வேண்டுமாம். நான் ரணில் விக்ரமசிங்கவிற்கு கூறுகிறேன் "ரணில் விக்ரமசிங்க, நீங்கள் அசிங்கமான வகையில் அரசியலில் இனவாதத்தை விதைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டாம்" என்றாலும் தான் அதற்கு பதிலளிக்க முன்னராக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சரியான பதிலை

அளித்துள்ளமை தொடர்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வடக்கிற்குச் சென்று இனவாதத்தை தூண்டி விட ரணில் விக்ரமசிங்க மேற்கொண்ட முயற்சியை வடக்கு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சுமந்திரனே நிராகரித்துள்ளார். இப்போது ரணில் நீங்கள் மன்னிப்புக் கோருங்கள் என்றார்.

## வேட்பு மனு தாக்கல் ஆரம்பம்

இதேவேளை, எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

அத்துடன், எல்பிட்டிய பிரதேச சபையின் முன்னாள் தலைவர் நளின் பிரியதர்ஷன மற்றும் எல்பிட்டிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் நான்கு பேர் வேட்பாளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் அட்டை தடையாக இருக்காது

வாக்காளர் ஒருவருக்குத் தனது வாக்களிப்பு நிலையம் எதுவென்று தெரியுமாக இருந்தால், அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்தை வைத்து வாக்களிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இருக்கும்பட்சத்தில் வாக்களிப்பு நிலையம் மற்றும் எண் ஆகியவற்றை அடையாளம் காண வசதியாக இருக்கும் என்று கூறிய அவர், ஆனால், வாக்காளர் அட்டை கிடைக்காவிட்டாலும் அதைப் பற்றி அச்சம் கொள்ள வேண்டாம் என்றும், வாக்காளர் அட்டை வாக்களிப்பதற்கு ஒருபோதும் தடையாக இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நட்டஈட்டை செலுத்தினார் பூஜித் ஜயசுந்தர

இதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விதிக்கப்பட்ட 100 மில்லியன் ரூபாய் இழப்பீடு ஆகஸ்ட் 16ஆம் திகதி செலுத்தி முடிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் போதிய தகவல்களைப் பெற்றிருந்தும் ஈஸ்டர் ஞாயிறு தொடர் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று, 12 அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணையின் பின்னர் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாயும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாயும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாயும், முன்னாள் தேசிய புலனாய்வுத் தலைவர் சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாயும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.



இந்த நிலையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் ஆகியோரும் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தியுள்ளதாகவும், அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன இதுவரை இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கடவுச்சீட்டுக்களை கண்காணிக்க போலாந்துக்கு விஜயம்



அதன்படி, முதற்கட்டமாக 50,000 கடவுச்சீட்டுகள் கிடைக்கப்பெறுவதுடன், சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு, மேலும் 100,000 வெற்று கடவுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெறும் என கூறப்படுகின்றது. அத்துடன், 05 வருட காலத்துக்குள் சுமார் 50 இலட்சம் வெற்று கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்றும், தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், புதிய வெற்று கடவுச்சீட்டுகளின் உற்பத்தி செயல்முறையை ஆராய்வதற்காக குடிவரவு திணைக்களத்தின் பிரதிநிதிகள் குழு போலந்தில் உள்ள தொழிற்சாலைக்குச் சென்றுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

## "மீனவர்களை மீட்க உறுதியான தூதரக முயற்சிகள் அவசியம்"



இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், "இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த 7-09-2024 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களையும் அவர்களது மூன்று மீன்பிடி விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் மட்டும் (7-09-2024 வரை) 350 மீனவர்கள் மற்றும் 49 மீன்பிடிப் படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளில் இது மிக அதிகமானது.

மேலும், இலங்கை நீதிமன்றங்கள், மீனவர்களின் சக்திக்கு மீறிய அபராதங்களை விதித்து வருகின்றன. இலங்கை அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள், தமிழக மீனவர்கள் அங்குச் சிறையில் இருக்கும் காலத்தை நீட்டிக்க வழி செய்வதோடு, ஏற்கெனவே துயரத்தில் உள்ள மீனவக் குடும்பங்களை மிகுந்த வேதனைக்குள்ளாகி அவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பிற்கும் வழி வகுக்கும்.

எனவே, இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்திடவும், கூட்டுப்பணிக் குழுக் கூட்டத்தை விரைந்து நடத்திடவும் வேண்டும். இதில், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## ரூ.15 பில். பெறுமதியான போதைப்பொருட்கள் மீட்பு

இந்த சுற்றிவளைப்புகளில் சுமார் 385 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அதன் பெறுமதி 9,631 மில்லியன் ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 4,860 மில்லியன் ரூபாய் பெறுமதியான 511 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், குறித்தக் காலப்பகுதியில் கேரள கஞ்சா, ஹஸிஸ், போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதைப் பொருட்களையும் கடற்படையினர் கைப்பற்றி உள்ளனர்.

இதேவேளை, இந்த போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 11 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 162 பேர் கைது செய்யப்பட்டதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

## நெல்லின் விலை உயர்வு



இந்த நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபை விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்ததன் பின்னர் தனியார்த் துறையினர் நெல்லை அதிக விலைக்குக் கொள்வனவு செய்வதற்கு முன்வந்துள்ளனர். இதனால், 105, 110 ரூபாயாக இருந்த கீரி சம்பா நெல்லின் கொள்வனவு விலை தற்போது 130 ரூபாயைத் தாண்டியுள்ளதாகவும் அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## விடுமுறைக்கு புதிய வழிகாட்டல்

விடுமுறையிலுள்ள அரசாங்க ஊழியர்கள் தமது வெளிநாட்டு விடுமுறைக்கான காலத்தை நீடிக்க வேண்டும் என்றால், அவர்களின் ஆரம்ப விடுமுறைக்காலம் காலாவதியாவதற்கு முன்னதாக அதற்கான அனுமதியை பெறவேண்டுமென குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுமுறையை நீடிப்பதில் ஏற்படும் ஏதேனும் சிக்கல்களை சரியான நேரத்தில் தீர்க்கத் தவறினால், அவ்வாறானவர்கள் குறிப்பிட்ட தினத்தில் கடமைக்கு திரும்பவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த புதிய நடைமுறைகளை அமுல்படுத்த தவறும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை அனைத்து அரச நிறுவனங்களிலும் சிறந்த நிர்வாகத்தையும், விடுப்புக் கொள்கைகளை கடைப்பிடிப்பதையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இந்திய-இலங்கை பயணிகள் கப்பல் சேவையில்...

இந்நிலையில், சனிக்கிழமைகளிலும் கப்பலை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை பயணிகளிடம் இருந்து விடுக்கப்பட்டுள்ளதாக குறித்த கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

பயணிகளின் கோரிக்கையை ஏற்று செப்டெம்பர் 21 முதல் சனிக்கிழமைகளிலும் சிவகங்கை பயணிகள் கப்பல் இயக்கப்படும் என்று கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி வாரத்தில் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் கப்பல் இயக்கப்படும். பயணிகள் பயணச்சீட்டை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

## "ஒரே ஆயுதம் வாக்குகள்தான்"

புகழிந்தன்

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெரும் பலமாக முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறும் வரைக்கும் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்களின் ஆயுதப் பலம் பேரம் பேசக்கூடிய பெரும் சக்தியா இருந்தது. இப்போது எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரேயொரு ஆயுதம் வாக்குகள்தான். யுத்தத்தின் பின்னரான கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் இந்த வாக்குப் பலத்தை நாம் வீணடித்துவிட்டோம்.

இம்முறையாவது அவற்றை இலக்குத் தவறாது பிரயோகிப்போம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து ஏழாலை ஐக்கிய நாணயசங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை (08 ) நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் தமிழினம் அரசியல் ரீதியாக பலவீனம் அடைந்துள்ளது. இதனை சாதகமாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகத்தை வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் ஊடாகச் சட்டரீதியாகக் கையகப்படுத்தி வருகின்றது. தமிழர் தாயகத்தின் இயற்கை வளங்களை, பொருளாதாரத்தை, பண்பாட்டைத் திட்டமிட்டுச் சிதைத்து வருகின்றது. இவற்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறது. தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையாக மாத்திரமே உலகுக்குக் காட்டி வருகின்றார்கள். இலங்கைத் தீவில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குத் தமிழ் மக்கள் மீது தொடுத்த யுத்தமே மூலகாரணம் ஆகும். மாறி மாறி ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் கடன் வாங்கி யுத்தத்தை முன்னெடுத்தமையே நாட்டைப் பொருளாதாரப் படுகுழிக்குள் தள்ளியது. ஆனால், இந்தக் கசப்பான உண்மையை ஏற்க எந்தத் தென்னிலங்கைத் தலைவர்களும் தயாராக இல்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைத் தொடர்ந்தும் இழைத்துக் கொண்டிருக்க முடியாது. இதனைக் கருத்திற் கொண்டே இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் பா.அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார்.

அவர் தனிநபர் அல்ல. ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசத்தினதும் குரல். அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் ஓங்கி ஒலிப்போம் என்றும் தெரிவித்தார்.

## "செப்டெம்பர் 22இல் அரசியல் மௌனித்து விடும்"

செல்லாக்காசாகியுள்ள முன்னாள் உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபை உறுப்பினர்களை விலைக்கு வாங்குமளவுக்கு, ரணிலின் அரசியல் வங்குரோத்தடைந்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை (09) நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "நாளுக்கு நாள் சஜித்துக்கான ஆதரவு அதிகரித்து வருகிறது. கூட்டத்தில் பங்கேற்கச் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் எங்களைச் சந்திக்கின்றனர். சிறந்த ஆட்சியை சஜித்தால் தர முடியுமென்ற நம்பிக்கை நாட்டின் நாலா திசைகளுக்கும் பரவி வருகிறது. வெற்றி நிச்சயிக்கப்பட்டுள்ளதால், ரணில் விக்ரமசிங்க வேறு வழிகளைக் கையாளத் தொடங்கி உள்ளார்.

அனுரகுமாரவை ஆதரிக்கும் வகையிலான கருத்துக்களை ரணில் வெளியிடுவது, வேறு சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. அனுபவமில்லாத அனுர ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதங்களில் ஓடி விடுவாரென நினைக்கும் ரணில், மீண்டும் ஆட்சிக்கு வரத்தீட்டும் சதியே இது.

கோட்டாவின் கையாட்களும் கள்வர்களுமே ரணில் விக்ரமசிங்கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர். வீசா மோசடியில் 54 ஆயிரம் கோடி ரூபாவை மோசடி செய்தனர். ரணிலால் இதைத் தடுக்க முடியவில்லை. புற்றுநோய் மருந்துக்குள் தண்ணீரைக் கலந்து மக்களைக் கொன்றதுடன், கோடிக்கணக்கில் கெஹெலிய ரம்புக்வெல்ல உழைத்தார். இந்த மோசடியையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தடுக்கவில்லை. இவ்வாறான கள்வர்கள் தங்களைப் பாதுகாக்கவே ரணிலுக்கு வாக்கு கேட்கின்றனர்.

ரணிலிடம் மீண்டும் அதிகாரம் வந்தால், இந்தக் கள்வர்கள் பாதுகாக்கப்படுவர். இதற்கு நாட்டு மக்கள் அனுமதிக்கக் கூடாது.

பல்லின சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் எம்முடனே உள்ளனர். எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசவின் சேவைகள் விசாலமானவை. ஸ்மாட் வகுப்பறைகள், பாடசாலைகளுக்கான பஸ்களை வழங்கி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்தார். சுகாதார சேவைக்குள் அரசியல் தலையீடுகள் நுழைந்து, சேவையைச் சீரழித்தபோது, சொந்த நிதியில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவினார்.

பொய் பேசாத, வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றுகின்ற நேர்மையான அரசியல்வாதி சஜித். எனவே, நம்பிக்கையுடன் வாக்களித்து சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யுங்கள்" என்று கூறினார்.

# “தோல்வியை உணர்ந்து விட்டார்”

■ நூருல் ஹுதா உமர்

ரணில் விக்ரமசிங்க, தோல்வியை உணர்ந்து விட்டார். அதனால்தான், தென்பகுதியில் நடைபெற வேண்டிய கூட்டங்களை இரத்து செய்து விட்டார்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

“வெல்லும் சஜித்” தேர்தல் பரப்புரை கூட்டமொன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் சாய்ந்தமருதில் ஞாயிற்றுக்கிழமை (08) இரவு நடைபெற்றது.

அக்கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



“வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லாத ஒருவர் தான் அனுரகுமார. அவர் நமக்கு வேண்டாம். இந்த நாட்டில் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்குத் தொழில் வாய்ப்பு கிடைக்க வேண்டும். நாட்டை நல்ல நிலையில் கொண்டு செல்ல வேண்டும். ஆகவே தான் இப்படிப்பட்ட ஒரு தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாசவினை நாம் ஆதரிக்க வேண்டும்” என்றார்

சஜித் பிரேமதாசவோடு நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாகப் பேசி ஒப்பந்தம் செய்து முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கின்ற ஒரு முடிவுக்குப் பிறகு தான் நாங்கள் அவரை ஆதரிக்கின்றோம். ஒரு ஜனாதிபதியின் மகனாகவும், ஆறு வருடங்கள் வீடமைப்பு அமைச்சராகவும் இருந்திருக்கின்றார். தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றார். அவர் ஜனாதிபதியானால் இந்த நாட்டை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பல நாடுகளுடன் பேசிக் கொண்டிருக்கிறார் என்றார்.


## கலை மதுரம்

கொழும்பு-பரி. தோமா கனிஷ்ட பாடசாலையின் கலை கலாசார விழாவான கலை மதுரம் பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் வியாழக்கிழமை(12) மாலை 5.01 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழிகள் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி கே.ரகுபரன் பிரதம அதிதியாகவும், பாடசாலை அதிபர் வண. பிதா. நிஹால் பெர்னான்டோ சிறப்பு அதிதியாகவும், கலந்து கொள்ளவுள்ளனர்.

பாடசாலையின் தமிழ் மன்றத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தரம் 4 முதல் தரம் 11 வரையான மாணவர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்படவுள்ளதுடன், இதர பாடசாலைகளின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இந்த நிகழ்வில் இடம்பெறும்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்து, தமிழ்த்தாய் வாழ்த்து, புஷ்பாஞ்சலி வரவேற்பு நடனம், நாடகம், லோகித ஜீவன் நடனம், மெதடிஸ்ட் கல்லூரியின் பாங்கரா நடனம், இசை நிகழ்வு, இந்து மகளிர் கல்லூரியின் நாட்டியாஞ்சலி நடன நிகழ்வு, மயிலின் அலசல் ஹாஸ்யம் நடனம், தேறக்க யாரையும் தேராது வில்லுப்பாட்டு, தாள வாத்தியம், பிஷப் கல்லூரியின் பாடல், கலப்பு இசைக் கச்சேரி, பழைய மாணவர்களின் பள்ளியம் நிகழ்ச்சி, தமிழ் முரசு முழங்கட்டும் நாட்டிய நிகழ்வு போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.




## புகைப்படம் எடுத்த புதிய தம்பதி சிக்கினர்

கண்டி தலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் திருமண புகைப்படங்களை எடுத்துள்ளதாக கூறி புதிதாக திருமணமான தம்பதி கைது செய்யப்பட்டுள்ளனர்.


குறித்த தம்பதி, தலதா மாளிகையின் நிலமேக்கு தெரியாமல் தலதா மாளிகையின் மேல் தளத்திற்கு சென்று புகைப்படம் எடுத்துள்ளத்துடன், அதை பொலிஸார் தடுத்த போது, அவர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும் தெரியவந்துள்ளது.

இது குறித்து கண்டி தலதா மாளிகையின் பாதுகாப்பு பொலிஸாரிடம் கேட்ட போது,

இச்சம்பவம் தொடர்பில் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் வாக்குமூலம் வழங்குவதற்காக தம்பதியினர் புகைப்படக் கலைஞருடன் திங்கட்கிழமை(09) கண்டிக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.



## வைத்திய அத்தியட்சகராக கடமையேற்பு



■ அபு அலா

கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் பிரதீபா பார்த்தீபன் திங்கட்கிழமை (09) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றி வந்த சிரேஷ்ட தரம் 1இல் உள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நேர்முகத்தேர்வு அண்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டது.

அந்த தேர்வில் வைத்தியர் பிரதீபா பார்த்தீபன் சித்தியடைந்து கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக நியமனம் பெற்றுள்ளார்.

## ஆரம்பமாகிறது வடக்கு ரயில் சேவை

வடக்கு ரயில் பாதையின் மாஹோ - அநுராதபுரத்துக்கும் இடையிலான ரயில் தண்டவாளங்களின் சீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது கல்கமுவ பகுதியில் யானை சுரங்கப்பாதையின் நிர்மாண பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகிறது.

அதன் பணிகள் நிறைவடைந்த பின்னர் காங்கேசன்துறை - கொழும்பு ரயில் சேவை மீள ஆரம்பிக்கும் என தெரியவந்துள்ளது.




## சட்டவிரோத பிரசாரம்; அறுவர் கைது

சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் சின்னத்தை மோட்டார் சைக்கிளில் கட்டி சட்டவிரோதமான முறையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் பேரணியுடன் சட்டவிரோதமான முறையில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இராஜாங்க அமைச்சர் ஒருவரின் அனுசரணையுடன் இந்த மோட்டார் சைக்கிள் பேரணி மற்றும் சட்டவிரோத தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.



## விபத்தில் இளைஞன் படுகாயம்

■ பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பாலத்திற்கு அண்மித்த பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (08) இரவு இடம்பெற்ற விபத்தில் அராலி கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த லோகேநாதிரம் கஜேந்திரன் (வயது 29) என்ற இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞன் வீதியைக் கடக்க முற்பட்ட போது, ஓட்டுமடம் பகுதியில் இருந்து வட்டுக்கோட்டை வந்த ஹயஸ் ரக வாகனம் அவர் மீது மோதியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த காயமடைந்த இளைஞன், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கம்பஹா மாநகர சபை

### 2025 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2025 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை, வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை மற்றும் யக்கலை வாராநத் சந்தை ஆகியவற்றுக்கான விலைமனுக்கோரல்.

2025 ஜனவரி 01ஆம் திகதியில் இருந்து 2025 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை மற்றும் யக்கலை வாராந்த சந்தை ஆகியவற்றுக்காக வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடுப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுகோரல் விண்ணப்பம் அதற்கான விலைமனு வைப்பு பணம் மற்றும் விலைமனு விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி 2024.09.24 ஆம் திகதி வரையிலும் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரையிலும் விலைமனு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனு விண்ணப்பப்படிவங்கள் அசல் மற்றும் நகல் என தனித்தனி கடித உறைகளில் இட்டு சீல் வைக்கப்பட்டு இரண்டு உறைகளையும் ஒரே உறையில் இட்டு பிறகு அவற்றையும் சீல் வைக்கப்பட்ட பிறகு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “சபையின் விலைமனுக்கோரல் விண்ணப்பம் -2025” என தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2024.09.25 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு மாநகர ஆணையாளர், கம்பஹா மகாநகர சபை, கம்பஹா என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட முடியும்.

சீல் வைக்கப்பட்ட டெண்டர் படிவங்களை ஏற்றுக்கொள்வது 2024.09.25 ஆம் திகதி அன்று பிற்பகல் 02.00 மணிக்கு முடிவடையும் மற்றும் முடிவடைந்தவுடன் உடனடியாக டெண்டர்கள் திறக்கப்படும். ஒப்பந்ததாரர் அல்லது அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்தல் அனுப்பப்பட்ட 07 நாட்களுக்குள், 04 மாதங்களுக்கான டெண்டர் வாடகைத் தொகையுடன் அதற்கான உரிய முத்திரை வரி கட்டணத்துடன் அனைத்தையும் ஒரே நேரத்தில் வைப்புத் தொகையாக செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். 04 மாத டெண்டர் வைப்புத்தொகையை ஒரே நேரத்தில் செலுத்தத் தவறிய டெண்டர்தாரர்களுக்கு டெண்டர்கள் வழங்கப்பட மாட்டாது. மேலதிக தகவலுக்கு, 033-4942296 அல்லது 033-4942297 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| இல | இடம் தொடர்பிலான விவரம் | விலைமனுகோரல் விண்ணப்பக் கட்டணம் | விலைமனு வைப்பீட்டு பணம் (மீளக் கையளிக்கப்படும்) | வருடாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| | **இறைச்சிக்கடை** | | | |
| 01 | இல. 07 பொது வர்த்தக நிலைய பன்றி இறைச்சிக் கடை (கம்பஹா) | 1,000.00 | 11,000.00 | 550,000.00 |
| 02 | இல. 08 பொது வர்த்தக நிலையம் ஆட்டிறைச்சி கடை (கம்பஹா) | 1,000.00 | 2,350.00 | 117,500.00 |
| 03 | யக்கல யக்கல புதிய வர்த்தக கட்டிடத் தொகுதி பன்றி இறைச்சி கடை 01 | 1,000.00 | 8,000.00 | 400,000.00 |
| 04 | யக்கல யக்கல புதிய வர்த்தக கட்டிடத் தொகுதி பன்றி இறைச்சி கடை 02 | 1,000.00 | 8,000.00 | 400,000.00 |
| 05 | யக்கல யக்கல புதிய வர்த்தக கட்டிடத் தொகுதி ஆட்டிறைச்சி கடை | 1,000.00 | 1,500.00 | 75,000.00 |
| | **வாராந்த சந்தை** | | | |
| 06 | யக்கல வாராந்த சந்தை | 1,000.00 | 86,000.00 | 4,300,000.00 |
| | **பொது மலசலகூடம்** | | | |
| 07 | ஒருத்தொட்ட வீதி பேருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 50,000.00 | 2,500,000.00 |
| 08 | ஜா-ஹெல வீதி பேருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 6,020.00 | 301,000.00 |
| 09 | வைத்தியசாலைக்கு அருகிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 2,000.00 | 100,000.00 |
| | **வாகனங்கள் நிறுத்தும் இடம்** | | | |
| 10 | ஜா-எல, கம்பஹா பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 10,200.00 | 510,000.00 |
| 11 | கம்பஹா - கொழும்பு பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 16,660.00 | 833,000.00 |
| 12 | கம்பஹா - நிட்டம்புவ பேருந்து நிலையம் வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 14,200.00 | 710,000.00 |
| 13 | ஜா-ஹெல பழைய பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 6,000.00 | 300,000.00 |
| 14 | பிரதான வாகனங்கள் நிறுத்துமிடம் | 1,000.00 | 36,420.00 | 1,821,000.00 |
| 15 | வைத்தியசாலைக்கு அண்மையில் வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 54,200.00 | 2,710,000.00 |
| | **பூக்கள் பகுதி** | | | |
| 16 | மத்திய பஸ் நிறுத்துமிட அலங்கார பூக்கள் பகுதி | 1,000.00 | 4,000.00 | 200,000.00 |

நீங்கள் சமர்ப்பிக்கும் டெண்டர் தொகைக்கு முத்திரை வரி கட்டணம் வசூலிக்கப்படும். சம்பந்தப்பட்ட வளாகத்திற்கு தண்ணீர்/மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருந்தால், டெண்டர்தாரர்கள் மூலம் முழு கட்டணத்தையும் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

**2024.09.06**
**லோச்சனா பாலசூரியா**
**நகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரங்கள், செயல்பாடுகள், நிர்வாக அதிகாரி,**
**மாநகர சபை,**
**கம்பஹா**

# தேர்தல் விஞ்ஞாபனங்களில் மறைக்கப்பட்ட கதை

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் நாளுக்கு நாள் சூடுபிடிக்கும் தேர்தல் பிரசாரத்தின் போது, தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் ஏதும் இதுவரையிலும் இடம்பெறாதது நல்லதுதான். என்றாலும், தேர்தல் விதிமுறை மீறல்களை நாளுக்கு நாள் கேள்விப்படுகிறோம். இந்த மீறல்கள் இறுதி வாரத்தில் அதிகரிக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், பிரசார காரியாலயங்கள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வேட்பாளர் ஒருவர் தனது வாக்கு எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிப்பதால், ஆதரவாளர்கள் வாக்குகளுக்கான பிரசாரங்களை செய்வதால் இதுபோன்ற விதிமுறைகள் மற்றும் விதிமுறைகள் மீறல்கள் இடம்பெறுகின்றன. இன்னும் சில தினங்களில் இதுபோன்ற சம்பவங்கள் அதிகம் பதிவாக வாய்ப்புள்ள போதிலும், 18ஆம் திகதி நள்ளிரவுக்குள் அனைத்து விளம்பரப் பணிகளையும் முடித்துவிட வேண்டும். இதுவே தேர்தல் சட்டமாகும்.

எனவே, எதிர்வரும் 18ஆம் திகதி வரை, ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தின் பரபரப்பான வாரமாக அமையும். எனவே, தேர்தல் விதிமுறைகளை மீறும் வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், வேட்பாளர்களும், அவர்களைப் பின்பற்றுபவர்களும், நேர்மையாகவும், அமைதியாகவும், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுமாறு நாமும் கேட்டுக் கொள்கிறோம். சட்டம் ஒழுங்கை பின்பற்றும் போது எவ்விதமான பிரச்சினைகளும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

தேர்தல் நடைபெறும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நாட்டின் அமைதியைச் சீர்குலைக்காமல் இரு தரப்பினரும் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். வன்முறை இல்லாத தேர்தல் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. அதன் பின்னர், 22ஆம் திகதியன்று பெறுபேறுகள் கிடைக்கும். இவையெல்லாம் தேர்தலுக்கு (வாக்களிப்புக்கு) முன்னரான அமைதி நிலைமையை பொறுத்தே அமையும்.

தேர்தல் களம் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகிறது. அனைத்து முக்கிய வேட்பாளர்களும் ஏற்கனவே தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை அறிவித்துள்ளனர். அவற்றில் பெரும்பாலான வாக்குறுதிகளை நடைமுறையில் செய்ய முடியுமா என்ற கேள்வி சாதாரண மக்களாகிய நமக்கு உள்ளது. ஆட்சிக்கு வந்தால், அரச ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு, குறைந்தபட்ச அரசு ஊதிய உயர்வு போன்றவற்றைக் கேட்டால், சாமானியர்கள் குமுறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சர்வதேச நாணய கடனில் இயங்கும் நாட்டில் ஊதியத்தை உயர்த்திய பிறகு நாடு எப்படி இயங்கும் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டாலும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பொருளாதார நல்லிணக்கச் செயற்பாட்டின் போது பொருட்களின் விலையும் வரியும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே எமது புரிதலாகும். அப்படியானால் ஜனாதிபதியின் தேர்தல் ஆசை நிறைவேறினால் மக்கள் வாழ்க்கைச் சுமையை அனுபவிக்க வேண்டி வரும் என்பது மறைக்கப்பட்ட கதை.

இந்த நேரத்தில் அமைதியான, நியாயமான, வன்முறையற்ற தேர்தலை நாடு கோருகிறது. இந்த நாட்டு மக்களால் தெரிவு செய்யப்படும் உண்மையான ஜனாதிபதி யார் என்பதை எதிர்வரும் 22ஆம் திகதிக்குள் அறிந்து கொள்ளும் வகையில், நீதியான மற்றும் அமைதியான தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு நாட்டின் பிரஜைகளாகிய நாம் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உணர்ச்சி கூட மொழியுடன் இணைந்தது தான். எதையும் சிந்திக்காமல் பேச முடியாது. எமது பேச்சுக்களுடன் சிந்தனை, மனிதனூடாகப் பிறக்கின்றது. கல்வி ஞானம் இன்றேல், நல்ல விடயங்களைப் பகர்ந்துகொள்ள முடியாது.

நல்ல சொற்களைப் பகர்ந்திட, தௌவான நெஞ்சத்தின் ஆற்றல் எங்களுடன் இணையவேண்டும். எடுத்த எடுப்பில் வார்த்தைகளைச் சிதற விடலாகாது. குழந்தைகள் கூட, புத்திசாலித்தனமாகப் பேசுகின்றன. எவரைக் கண்டாலும் புன்னகை செய்கின்றன. குழந்தைகள் எவரையும் எதிரியாக நோக்குவதில்லை.

ஆனால், மனிதனின் வயது கூடக்கூட, மொழியை அழகாகப் பயன்படுத்த மறந்துவிடுகின்றார்கள். மற்றையவர்களின் மனம் நோகும் வண்ணம் பயன்படுத்தி விடுகின்றனர். கர்வம் குடியேறியவனின் அறிவு, கரைந்து விடுகின்றது.

அடிக்கடி மனம் மாறினால், அவர்கள் தங்களை வீரர்கள் என எண்ணிக்கொள்கின்றார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரே மனநிலையில் வாழ்வதற்குப் பக்தி, தியானம் அவசியம்.

தொடர்ந்து உறங்கலாகாது, அறிவின் எழுச்சியுடன் தன்னைத் தானே உருவாக்குதே மனிதனின் கடமை. எப்போதும் எதிலும் விழிப்புடன் இருந்தால் கடமைகள் நிறைவேறும்.

அன்பு எம்மை ஒழுக்கத்துடன் இயங்க வைக்கும். சலனமற்ற நிலை உருவாகும்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சூடுபிடிக்கும் களம்; மக்களே கவனம்

மொஹமட் பாதுஷா

**வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்படுவதையும், குறிப்பாக பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிரப்படுவதையும் முஸ்லிம் சமூகம் விரும்பவில்லை.**

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துக் கொண்டு இருக்கின்றது. முன்னர் கருத்துக் கணிப்புபக்களில் எதிர்வு கூறப்பட்ட அனுமானங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பின்னால் பல காய்கள் நகர்த்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட இந்த சூடு, ஒரு நெருப்பாக மாறி விடுமோ என்ற அச்சம் அதிகரிப்பதையும் தவிர்க்க முடியாதுள்ளது.

இலங்கையில் இம்மாதம் 21ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவது ஒரு ஜனாதிபதித் தேர்தல் என்றாலும் கூட, இந்தத் தேர்தலின் ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியையேனும் அடைந்துகொள்வதற்காகவும், இன்னும் ஐந்தாறு வருடங்களில் ஜனாதிபதி, பிரதமர் அரியாசனத்தில் ஏறும் கனவோடும் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் உள்ளனர் என்பதை உண்மையாகும். மிக முக்கியமாக இலங்கையில் நடக்கின்ற தேர்தல்கள் ஆட்சி மாற்றங்களில் வெளிநாட்டுச் சக்திகளின் செல்வாக்கு தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. இம்முறைசார்தலில் சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் தம்முடைய அரசியலைச் செய்து,செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்ள முனைகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. பிரதான வேட்பாளர்களில் தலா ஒருவரைப் பிரதான தெரிவாக இந்த நாடுகள் கொண்டுள்ளன. அவர்களது விருப்பத்திற்குரிய வேட்பாளர் வெற்றி பெறாவிட்டால் வெற்றி பெறக் கூடியவரை தமக்கு ஆதரவானவராக மாற்றுவதற்கு இராஜதந்திரக் காய்கள் நகர்த்தப்படுகின்றன.

தான் வெற்றி பெறமுடியாது என்று ஒரு வேட்பானர் கருதுமிடத்து அல்லது தனக்கு ஆதரவான ஒரு வேட்பாளரை ஜனாதிபதியாக்க முடியாமல் போகலாம் என உள்நாட்டு,வெளிநாட்டுச் சக்திகள் முன்கணிக்குமிடத்து, குட்டையைக் குழப்புவதற்கான வாய்ப்புக்கள் இன்னும் இருப்பதாகவே அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதாவது, மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிகின்ற அரசியலுக்குப் பின்னால் திரைமறைவு அரசியல் மூலோபாயங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் காரணமாகவே தேர்தல் நடக்குமா, அப்படி நடந்தாலும் அமைதியான,நீதியான வாக்கெடுப்பாக அமையுமா? வாக்களிப்பு முடிந்தாலும் சுமுகமான முறையில் அடுத்த ஜனாதிபதி பதவியேற்க முடியாதவாறு குழப்பங்கள் தலைதூக்குமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

எனவே, எந்தநேரத்திலும் கள நிலைமைகள் மாறலாம், கொதிநிலை அடையலாம் என்ற அடிப்படையில் நாட்டு மக்கள் மிகவும் அவதானமாகவும் பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதை இப்பத்தி வலியுறுத்துகின்றது.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தல் களம் மிக வித்தியாசமானது. குறிப்பாக எந்தவொரு பிரதான ஜனாதிபதி வேட்பாளரையும் சிறுபான்மை இனத்திற்கு எதிரானவர் அல்லது இனவாதி என முத்திரை குத்த முடியாத நிலை உள்ளது. இந்தத் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையிலேயே பலத்த போட்டி நிலவுகின்றது.

நாமல் ராஜபக்ஷ, விஜயதாச ராஜபக்ஷ, சரத் பொன்சேகா, திலித் ஜயவீர உள்ளிட்ட ஏனைய 36 வேட்பாளர்களும் சில இலட்சம் வாக்குகளைப் பங்குபோட்டுக் கொள்வார்கள். வாக்குகளை உடைப்பார்கள். அதைவிட வேறொன்றும் நடந்து விடப் போவதில்லை என்றே கணிக்க முடிகின்றது.

சீனாவும், இந்தியாவும், அமெரிக்காவும் தலா ஒவ்வொரு பிரதான வேட்பாளர்களுள் ஒருவருக்குப் பின்னால் நிற்கின்றன. ஆனால், வெற்றியானது வேறு ஒருவர் பக்கம் சாயுமாயின், அதனை குழப்பியடிப்பதற்கு அல்லது உடனடியாக நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு அடுத்த ஜனாதிபதியாகும் நபருக்குத் துணை நிற்பதற்கு உலக அரசியல் தயங்காது என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

பிரதான மூன்று வேட்பாளர்களிடையே பிளஸ்களும் மைனஸ்களும் உள்ளன. நாட்டுக்கும், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் சாதகமான,பாதகமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய ஆற்றல் எல்லோரிடமும் இருக்கின்றது.

இந்தப் பின்னணியில், ஆரம்பத்தில் வெளியான பலகருத்துக் கணிப்புக்களில் சஜித் வெற்றி பெறுவார் என்று கூறப்பட்டது. சில கருத்துக்கணிப்புக்கள் ரணில் விக்ரமசிங்வுக்கான வெற்றியை முன்னறிவிப்புச் செய்தன. இதற்கிடையில், அனுரகுமாரவுக்கான ஆதரவு முன்னரைவிட அதிகரித்துள்ளதைப் பலரும் அவதானிக்கத் தவறில்லை.

இந்நிலையிலேயே, பிரதான முஸ்லிம் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகியன சஜித்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்தன. தேசிய காங்கிரஸ் கட்சியும் வேறு சில முஸ்லிம் எம்.பிக்களும் ரணிலின் வெற்றிக்காகப் பிரசாரம் செய்கின்றன. தேசிய ரீதியாகத் தமிழ் அரசியல் வாதிகளும் இவ்விதமே இரு வேட்பாளர்களையும் ஆதரிக்கின்றனர்.

சம காலத்தில்,வடக்கு, கிழக்கின் சில தமிழ் அரசியல் தரப்புக்கள் தமிழ் பொது வேட்பாளராக முன்னாள் எம்.பி. அரிநேத்திரனை களமிறக்கியுள்ளன. தமிழரசுக் கட்சியானது சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக முடிவெடுத்தாலும் அந்த முடிவைக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டோர் எதிர்க்கின்றனர். இந்த நிலையில், மாவையை ஜனாதிபதி ரணில் சந்தித்துள்ளார்.

ரணிலும் சஜித்தும் அதிகாரப் பகிர்வு பற்றி தம்முடைய தேர்தல் விஞ்ஞாபனங்களில் அறிவித்துள்ளனர். 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக சஜித் கூறியுள்ளார். 13இன் பிரகாரம் அதிகாரங்களைப் பகிர்வதுடன், காணி அதிகாரங்கள் பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் புதிய பாராளுமன்றத்திற்குப் பாரப்படுத்தப்படும் என்று ரணில் விக்ரமசிங்க தனது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தம் என்பது அரசியலமைப்பில் இருக்கின்ற விடயமாகும். எனவே, அதனை நடைமுறைப்படுத்துவது தவறு என்று யாரும் கூற முடியாது. ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்படுவதையும், குறிப்பாக பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிரப்படுவதையும் முஸ்லிம் சமூகம் விரும்பவில்லை.

நிலைமை இப்படியிருக்க, அதிகாரங்களைப் பகிரப் போவதாகக் கூறுகின்ற சஜித்தையும், ரணிலையும் ஆதரிக்கின்ற முஸ்லிம் அரசியல் வாதிகள் இது பற்றிச் சிந்தித்தார்களா என்று முஸ்லிம்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். ஆயினும், இது விடயத்தில் முஸ்லிம்களின் நலன் எந்தளவுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது என்பதை இதுவரை எந்த முஸ்லிம் தலைவரும் சொல்லவில்லை.

இதேவேளை, 13ஆவது திருத்த அமுலாக்கத்தை மையமாகக் கொண்டே சுமந்திரன் தலைமையிலான தமிழரசுக் கட்சி அணி சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளது என்ற செய்தி தமிழ் மக்கள் மத்தியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தினாலும். அது பிரசாரமாகப்படும் போது, சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே சஜித் விடயத்தில் பாதகமான பார்வைகளே உருவாகலாம்.

இந்தப் பின்னணியில், தனியனாக வந்து பிரதமராகி, ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவுத் தளம் ஒரு மிதமான மட்டத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஏனெனில், 2022ற்கு பிறகு அவர் பற்றிய ஒரு நல்லபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. சஜித் பற்றி 2019இல் இருந்தவர் மாறியிருக்கின்ற சூழலில், ஆதரவுத் தளத்தின் ஏறுமுக போக்கு மெதுவடைந்துள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

சமகாலத்தில், அனுரகுமாரவுக்கான ஆதரவுத்தளம் ஆரம்பத்தில் குறைந்த மட்டத்திலேயே இருந்தது. ஆனால், இப்போது ஆதரவு அலை அதிகரித்திருக்கின்றது அல்லது நுட்பமான தேர்தல் பிரசாரங்கள், ஊடக செய்திகளின் மூலம் அப்படியான ஒரு மாயத் தோற்றப்பாடு கட்டமைக்கப்பட்டு வருகின்றது எனலாம். குறிப்பாக வழக்கம் போல ஜே.வி.பி. அணி இளைஞர்களைக் குறிவைத்துள்ளது.

எனவே, மாறிக் கொண்டிருக்கின்ற களத்தில் தம்முடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்குப் பிரதான வேட்பாளர்கள் 'எதுவும் செய்வதற்கு' பின்வாங்க மாட்டார்கள் என்பதையும். ஏனைய வேட்பாளர்களைக் குழப்புவார்கள் என்பதையும், தமக்கு ஆதரவான நபரை இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக்க சீனாவும் இந்தியாவும் அமெரிக்காவும் காய் நகர்த்தும் என்பதையும் மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

ஆனால், 'மாற்றம்' என்று கதைக்கின்றவர்கள் உட்பட யார் ஜனாதிபதியானாலும் குறுகியகாலத்தில் நாட்டில் நாம் நினைக்கின்றபடி, எல்லாவற்றையும் மாற்றிவிட் முடியாது என்பதே நடைமுறை யதார்த்தமாகும். ஆகவே, ஒப்பீட்டளவில் யார் பரவாயில்லை என்பதுதான் இங்கு மக்களால் எடுக்கப்படவேண்டிய முடிவாகும்.

தேர்தல் பிரசாரங்கள் முடிவடைந்து தேர்தல் நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பட்டு, அடுத்த ஜனாதிபதி பதவியேற்பதற்கு இடைப்பட்ட காலத்தில் நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டு விடுமா என்ற அச்சத்தையே விடயமறிந்த பலர் இப்போது முன்வைக்கின்றனர்.

கண் மூடித்தனமாக ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதிகளுக்குப் பின்னால் சென்ற ஆதரவாளர்களை, மக்களை அந்த அரசியல்வாதிகள் ஆபத்தான வேளைகளில் காப்பாற்றியதும் இல்லை, நன்றிக்கடன் செலுத்தியதுமில்லை. நெருக்கடியான நேரத்தில் கைவிட்டோடியது தான் வரலாறு.

எனவே, வெளிப்படையான அரசியலைப் புரிந்துகொள்வது மட்டுமன்றி, மறைமுக நகர்வுகள், ஆபத்துகள் பற்றியும் மக்கள் மிக அவதானமாகவும் பொறுப்புடனும் தெளிவுடனும் செயற்படவேண்டும்.

இல்லாவிட்டால் இந்த அமைதியின்மைக்குள் மக்கள்தான் பலிகடா ஆவார்கள்.

## கடிதங்கள்

### குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன் பெரும் அவலம்

கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்காக வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன் 15 நாட்களுக்கு மேலாக இரவு பகலாகக் குழந்தைகளுடன் பொது மக்கள் காத்திருக்கும் பெரும் அவலம் நிகழ்கிறதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாளைக்கு 60 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன நிலையில், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இவ்வாறு 15 நாட்களுக்கு மேலாக வரிசையில் நிற்கின்றனர்.

கழிவு வாய்க்காலின் மிக மோசமான துர்நாற்றம், நுளம்பு கடி தொல்லை, பாம்புகளின் நடமாட்டம் என பெரும் அவலத்திற்கு முகம் கொடுத்து வாரக்கணக்கில் இரவு பகலாகப் படுக்கை விரிப்புகளை விரித்துப் படுத்து உறங்குவதாகவும், தெரிவித்துள்ள பொதுமக்கள். இந்த பெரும் அவலத்திற்கு விரைவில் தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

– மு.தமிழ்ச்செல்வன்





பனையில் இருந்து, தென்னை நோக்கிய

# பயணம்



கனிரா ஜெயகாந்தன்,
மூன்றாம் வருடம்,
ஊடகக்கற்கைகள்துறை மாணவி.

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினால் ஏற்ப்பாடு செய்யப்பட்ட கலாசார ஒன்றிப்பு சுற்றுலாப் பயணமானது கடந்த வெள்ளிக்கிழமை அன்று யாழ். பல்கலைக்கழகத்தின், நல்லாயன் சிற்றாலயத்தில் இருந்து ஆரம்பமானது. இதில் சமய வேறுபாடுகளைக் கடந்து கத்தோலிக்க மாணவர்கள், இந்து சமய மாணவர்கள் மற்றும் முஸ்லிம் சமயத்தினை சேர்ந்த மாணவர்கள் போன்றோர் இணைந்திருந்தமை விசேட அம்சமாகக் காணப்பட்டது. மொத்தமாக 55 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த சுற்றுலாவில் இணைந்திருந்தோம். மாலை 8 மணியளவில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நல்லாயன் இல்லத்திலிருந்து ஆரம்பமாகப் பயணமானது பதுளை நோக்கிப் புறப்படலானது.

அதிகாலை 4 மணியளவில் அனைத்து சமயத்தவர்களின் பக்தி கீதங்களுடன் சுற்றுலாவின் முதல் நாள் பயணங்கள் ஆரம்பமாகியது.

வடமாகாணத்திலிருந்து முதன்முறையாக இவ்வாறு ஊவா மாகாணம் நோக்கிய பயணமானது என்னைப்போன்ற அனைவருக்கும் இது புதிய அனுபவமாகவே அமைப்பெற்றது.
கற்பாறைகளையும் - மலையினையும் சமப்படுத்தியும் அமைக்கப்பட்டிருந்த வீடுகள், நீண்டு நெடிந்து வளர்ந்திருந்த இறப்பர் மற்றும் தென்னை மரங்கள், தேயிலைத் தோட்டங்கள், தேயிலை வாசனை, வளைந்து சரிந்து காணப்பட்ட மலைகளுடனான பாதைகள், தொடர் லயன் வீடுகள், மலையாக மக்களின் வாழ்க்கைமுறை, மழை - வெய்யில் இரண்டும் இணைந்த காலநிலை இன்னும் எத்தனை புதுமைகள் மலையகத்தின் இயற்கையையும், அதன் எழிலையும் வர்ணிப்பதற்கு வார்த்தைகளே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும்.

பதுளை மாவட்டத்தில் நாம் பார்வையிட்ட முதல் இடமாக வரலாற்றுச் சிறப்புமிக்க ஹப்புத்தளை 'எடிசன் ஓரடுக்கு மனை' (Adisham Bungalow) அமைந்திருந்தது. நாம் செல்லும்போது, வழி நெடுகிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் காணப்பட்டனர்.
பாதையெங்கும் காணப்பட்ட மரங்களையும், அழகிய தேயிலைத் தோட்டங்களையும் ரசித்தபடியே சில கிலோ மீற்றர் நடந்து 100 ரூபாய் அனுமதிச் சீட்டினை பெற்று எடிசன் ஓரடுக்கு மனையினுள் நுழைந்தோம். பல வர்ண ரோஜாச் செடிகள் உட்பட பல பூக்களை கண்டு மனம் ரசித்ததுடன், குறித்த இடத்தின் பழைமையும் - வரலாற்றினையும் அறிந்து கொள்ள எமக்கு வாய்ப்பு கிடைத்தது. பின்னர் மொனராகலை என்னும் இடத்தை பார்வையிட்டதுடன், குழு, புகைப்படங்களை எடுத்துக்கொண்டோம்.
மாலைவேளையில் ஏற்கெனவே திட்டமிட்டபடி, மூன்றாவது இடமாகிய, பதுளை மாவட்டத்திலுள்ள தெமோதரை என்ற பிரதேசத்தில் காணப்படும் எல்ல என்ற இடத்திற்கும் - தெமோதரை தொடருந்து நிலையத்திற்கு இடையில் அமைந்துள்ளது, ஒன்பது வளைவுகள் பாலத்தினை(Nine Arches Bridge) பார்வையிடச் சென்றிருந்தோம். கிட்டத்தட்ட 1.1/2 கீலோ மீற்றர்கள் நடந்து இந்த பாலத்தினை பார்வையிட்டோம். இதன் சிறப்பம்சம் யாதெனின், பிரித்தானியப் பேரரசு இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் பிரித்தானிய ரயில்வேயின் கட்டுமானங்களின் சிறப்பான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக இது கருதப்படுகின்றது. பிரித்தானிய பொறியியலாளர்களுடன் இலங்கையரான அப்புகாமியும் இணைந்து இதனை கட்டியுள்ளனர்.

இத்திட்டத்தின் பிரதான பொறியியலாளராக விமலசுந்தர என்பவரும், வடிவமைப்பாளராக ஹரல்ட் குத்பேர்ட் மார்வூட் என்பவரும் காணப்படுகின்றனர். இது 'வானத்தில் பாலம்' என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது.
இலங்கை தொடருந்து பயணப் பாதைகளில் முக்கிய இடமாக இந்த பயணப்பாதை திகழ்கின்றது. இந்தப் பாலத்தினூடாக தொடருந்து வரும் அழகிய காட்சிகளை இன்றும் இலங்கை தொடருந்து நிலையங்களிலும், விளம்பரப் பலகைகளிலும் இருப்பதனை காணலாம். இந்த பாலத்தின் வழியே தொடருந்து வரும் காட்சியினை காண்பதற்கு எமக்கும் இந்த சந்தர்ப்பத்தில் வாய்ப்பு கிடைத்திருந்தது.
இப்பகுதியின் சுற்றுவட்டாரம், இயற்கையின் நிலத் தோற்றங்கள், பாலத்தின் கட்டுமான புதுமை, பக்கத்து மலைக்குன்று இருக்கும் பசுமை, குகையின் ஊடாக புகையிரதம் செல்லும் காட்சி என்பவற்றினை பார்வையிடப் பல உல்லாசப் பயணிகள் எம்மைப்போலவே இவ்விடத்திற்கு வருகைதந்திருந்தார்கள்.
முதல் நாள் பயணத்தின் இறுதி திட்டமிடலாக, பசறைக்கு சென்று அங்கு இரா உணவை எடுத்து விட்டு, மடுச்சீமை நோக்கி பயணமானோம்.
அங்கே நள்ளிரவு 12 வரைக்கும் எமக்கான (firegame) நடைபெற்றது. சுற்றுலாவிற்குச் சென்றிருந்த அனைவரும் தீயை சுற்றி அமர்ந்திருந்து ஆடல், பாடல் மற்றும் விளையாட்டுக்கள் என மகிழ்ச்சியாக முதல்நாள் இரவினை கழித்த பின்னர் நித்திரைக்குச் சென்றிருந்தோம். இவ்வாறு பயணத்தினை முதல் நாளினை இனிதாக நிறைவு செய்தோம்.
சுற்றுலாவின் இரண்டாம் நாள், மடுச்சீலை மண்ணில் புனித வனத்துச் சின்னப்பர் ஆலயத்தில் காலைத் திருப்பலி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மடுல்சீமை எலமான் பகுதியில் அமைந்துள்ள சிறிய உலக முடிவு பகுதிக்குச் சென்றோம். பின்னர், ஊவா-வெல்லஸ பல்கலைக்கழகம் நோக்கிப் புறப்பட்டோம்.

ஊவா-வெல்லஸ பல்கலைக்கழகத்தினை பார்த்துவிட்டு, துன்ஹிந்த நீர்வீழ்ச்சியைப் பார்த்து விட்டு மீண்டும் பதுளை மண்ணிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டோம்.
இந்த சுற்றுலாப் பயணமானது எனது மூன்று வருட பல்கலைக்கழக வாழ்க்கையின் முதல் பயணமாக அமைந்திருந்ததால் அது எனது வாழ்க்கையில் முக்கியம் பெறுகின்றது.
சுற்றுலாவின் போது, மகிழ்ந்திருந்தாலும் சில கஷ்டங்களை அனுபவித்தமையை சொல்லியே ஆகவேண்டும்.

ஒன்பது வளைவுகள் பாலத்தினை (Nine Arches Bridge) பார்வையிடச் சென்ற பாதை எமக்கு மிகவும் கடினமாக அமைந்திருந்தது, ஒன்பது வளைவுகள் பாலத்தினை பார்வையிட்டுவிட்டு எமக்கு மீண்டும் பேருந்து நோக்கி நடந்து செல்வதற்கு மிகமிகக் கடினமாக அமைந்திருந்தது. மற்றும் சிறிய உலக முடிவினை பார்வையிடச்செல்லுகின்ற பாதை பாதுகாப்பற்ற பயணப்பாதையாக அமைந்திருந்தது.

அதிகளவிலான உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் குறித்த இடங்களானது மக்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கும், களைப்பின்றி பார்வையிடுவதற்கும் ஏற்ற இடங்களாக அமைந்திருக்கவில்லை. இவ்வாறான குறைபாடுகள் இனிவருகின்ற காலங்களில் நிவர்த்தி செய்யப்படுமாக இருந்தால் இன்னும் அதிகமாக மக்கள் பதுளை நோக்கி சுற்றுலா மேற்க்கொள்வார்கள் என நான் நம்புகின்றேன்.

இந்த சுற்றுலாவனது மதங்கள், இனங்கள், மொழிவேறுபாடுகள், முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருடம் என எமக்குள் காணப்பட்டும் வருட வேறுபாடுகளைக்கடந்து அனைத்து மாணவர்களையும் ஒன்றாக இணைந்திருந்தது.

பனை மரங்களுக்கு அதிக பிரசித்த பெற்ற வட பகுதியிலிருந்து - அதிகளவிலான தென்னை மரங்களைக் கொண்டிருக்கின்ற, தென்னை முக்கோண வலயத்தினை அண்மித்த இந்த பயணமானது எமக்குப் பல புதிய பாடங்கள் கற்றுத்தந்துள்ளது.

இந்த சுற்றுலாவின் போது, பெற்றுக்கொண்ட பல ஞாபகங்களும், எடுத்துக்கொண்ட புகைப்படங்களும் காலங்கள் பல கடந்தாலும் பல கதைகளைப் பேசும் என்பது எனது நம்பிக்கையாகும்.
இதுபோன்ற பல சுற்றுலாக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்படுகின்றமை எமக்கான திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ற இடமாகவும், புதிய இடங்கள், மனிதர்கள், புதிய கலாச்சாரம், பண்பாட்டுப் பரிமாற்றம், பண்பாட்டு ஒருங்கிணைப்பு போன்றவற்றினை கற்றுக்கொள்வதற்கு வழி ஏற்படுத்திக்கொடுக்கும் களமாக அமையப்பெறுவதன் காரணமாகச் சிறப்பான விடயமாகவே அமையும் என்பது எனது தனிப்பட்ட பார்வையில் நோக்கப்படுகின்றது.
பனையிலிருந்து தென்னை நோக்கிய பயணமானது எந்தவொரு இடர்களும் இல்லாமல் இறைவனின் துணையால் பாதுகாப்பாக நிறைவடைந்தது.








# 'திருநங்கைகள் உலகம்'


## நூலின் பார்வைக்கோணம்



கணேஸ்குமார் மதியந்தி,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

திருநங்கை எனப்படுவோர் பிறப்புறுப்பால் ஆண் என்று அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் தம்மை பெண்ணாக உணர்ந்து, பெண்களாக வாழ முற்படுவோர்களைக் குறிக்கும். இவர்கள் அலி, பேடி, அரவாணி போன்ற பெயர்களில் கேலியாக அழைக்கப்படுவதுடன், சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறான திருநங்கைகள் பற்றிய பல தகவல்கள் நூல் வடிவில் வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில், திருநங்கை பற்றிய நூல்களில் பிரதானமாகக் காணப்படுகின்ற நூலாக 'திருநங்கைகள் உலகம் அதிசயங்கள் அதிர்ச்சிகள்' என்ற நூலைப் பால் சுயம்பு என்பவர் எழுதியுள்ளார்.

நூல் பற்றிய விடயங்களை அறிந்து கொள்வதற்கு முன், நூலாசிரியர் பால் சுயம்பு பற்றி அறிந்து கொள்வோம். எழுத்தாளர், பத்திரிகையாளர், தொகுப்பாளர், பத்திரிகை ஆசிரியர் போன்ற பலமுகங்களைக் கொண்டவர் பால் சுயம்பு.
இவர் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டார் பகுதியில் இசங்கன்விளை என்ற ஊரில் 25.04.1963இல் பிறந்தவர். இவரது பெற்றோர், பால் நாடார் - சொர்ணம்.
20 வயதிலிருந்து இவரது படைப்புகள் பல்வேறு இதழ்களில் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. சிறுகதை, தொடர்கதை, கட்டுரைகள் என ஆயிரத்துக்கு மேலான இவரது படைப்புகளின் மூலம் படைப்புகளின் பல பரிசுகள், விருதுகள் பெற்றுள்ளார். பெற்ற விருதுகளில் பிரபல்யமானது விமர்சனம் விருது ஆகும்
நூல் பற்றி நோக்குவோமானால் நூலின் பெயர் திருநங்கை உலகம் அதிசயங்கள் அதிர்ச்சிகள் இந்நூலின் முதல் பதிப்பு 2009 வெளியிடப்பட்டது. ஆசிரியர் பால் சுயம்பு, 24 திருநங்கைகளை நேரில் சந்தித்து உரையாடி, அவர்களுடைய வாழ்க்கையைப் பதிவு செய்து உள்ளார்.
நம்மிடையே வாழும், ஆனால், நம்மால் அனைத்து விதத்திலும் புறக்கணிக்கப்படும் ஒரு சமூகத்தின் பதிவு ஆவணமாக, இந்த புத்தகத்தைக் கருதுவது சிறப்பு. இவர் சந்தித்த அத்தனை திருநங்கைகளும் இப்பொழுது நல்ல நிலைமையில் உள்ளவர்கள். ஓரிருவரைத் தவிர, மற்ற அனைவருமே ஒரு கட்டத்தில், குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்டு, பால்புதுமையினர்களால் ஆதரிக்கப்பட்டவர்கள். ஆனால் ஒவ்வொருவர் வாழ்விலும் நடந்த நிகழ்வுகள், மனதில் சோகத்தை ஆழமாக விதைக்கின்றது. பால்துமையினர்களின் குடும்ப குழு கட்டமைப்பு, அவர்களது உறவுமுறைகள், பழக்கவழக்கங்கள், செய்யும் பொதுவான தொழில்கள், நடனம் மற்றும் இதர திறமைகள், வணங்கும் கடவுள்கள், பாலின மாற்றம் செய்யும் முறைகள் பற்றி விரிவான குறிப்புகள் புத்தகம் முழுவதும் உள்ளன. பால்துமையினர்கள் அத்தனை பேருமே இரண்டாம் முடிவைத் துணிந்து எடுத்தவர்கள். ஏன்?. எது அவர்களை அப்படி முடிவு எடுக்கத் தூண்டியது?. கண்டிப்பாக அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம். 24 பேர்களின் கண்ணீர் கதைகளை படித்த பிறகு உங்களுக்குப் புரியும்.
இது வெறும் கதைகளின் தொகுப்பு மட்டும் அல்ல. கடைசி சில அத்தியாயங்களில், பால்துமையினர் ஏன் சிலர் பிறக்கின்றனர், எத்தனை விதமான மாற்றுப்பாலினத்தவர்கள் உள்ளனர், அதற்கான அறிவியல் விளக்கங்கள், மருத்துவ பெயர்கள், குழந்தைகளிடம் பெற்றோர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள், பால்துமையினர்க்காக இயங்கி வரும் நலத்திட்டங்கள், இயக்கங்கள் பற்றி விரிவாக விளக்கி இருக்கிறார். ஜாதி பட்டியலிலும், மதப் பட்டியலிலும், ஓட்டுப் பட்டியலிலும் இடம்பெறாமல், தனக்கு தானே வரைமுறைகள் விதித்துக்கொண்டு வாழும் இந்தியத் திருநங்கைகள் சமூகத்தின் இன்றைய நிலை பற்றி அறிந்துகொள்ள ஒரு முழுமையான புத்தகம்.
இவரின் நூல் ஆரம்பத்தில் 'அறிந்தும் அறியாமலும்' புத்தகம் படிக்கும்போதுதான், இனப்பெருக்க மண்டலத்திற்கும் சிறுநீரக மண்டலத்திற்கும் பெண்ணுடலில் வெவ்வேறு துவாரங்கள் என்று தெரியும். ஆணுடலைத் தாங்கி ஆண் மனதுடன் சிந்திக்கத் தெரிந்த எனக்கு, இது பெரிய ஆச்சரியம்தான். இதேபோல் யாரோவொரு பெண் இவ்விரு மண்டலங்களும் ஆணுடலில் ஒரே இடத்தில் முடிவதை அறிந்து அதிசயிக்கலாம். ஆணோ பெண்ணோ இன்னொரு பாலினரை அறிவு அல்லது உறவு ரீதியாக அறிந்துகொள்ள முற்படும்போது, மனிதவுடலில் இயற்கை புதைத்து வைத்திருக்கும் ஆச்சரியங்கள் பிரமிக்க வைக்கலாம். இந்த இரு பாலினருக்கும் பொதுவான ஆச்சரியத்தையும், கேள்விகளையும், சில நேரங்களில் பயத்தையும் உண்டாக்கும் இயற்கையின் இன்னொரு படைப்பு பால் பிறழ்வுகள். ஆண் அல்லது பெண் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத Congenital Adrenal Hyperplas யை, இருபால் உறுப்புகளையும் கொண்ட Hermaphroditism குரோமசோம் அடிப்படையில் ஆணாகவும் உடலமைப்பில் பெண்ணாகவும் அமையும் Androgen Sensitive Syndrome , என்று பால் பிறழ்வுகளில் பலவகைகள். இவர்களில் குறிப்பிடத்தக்க வகையினரான ஆணுடலையும் பெண் மனத்தையும் பெற்றிருக்கும் மாற்றுப் பாலினத்தவரே திருநங்கைகள் என்று அறியப்படுகிறார்கள். அவர்களைப் பற்றிப் படிப்பதற்காக நான் தேர்ந்தெடுத்த புத்தகங்களில், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் அளவிற்கு நான் புரிந்துகொண்ட புத்தகம் 'திருநங்கைகள் உலகம்' சுருக்கமாகச் சொன்னால், சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், இருக்கும் அல்லது





அந்நிலையை நெருங்கிக் கொண்டிருக்கும் திருநங்கைகள் இருபது பேரின் வாழ்க்கைச் சுருக்கம். தங்களைத் திருநங்கையாக உணர்ந்த நாள்முதல் அதனை வெளிக்காட்ட முடியாமல் பட்ட அவஸ்தைகளும், குடும்பத்தின் கட்டுப்பாடுகளும், சமூகம் தந்த அவமானங்களும், தன்னைப் போன்றவர்களை அடையாளம் கண்டு, அங்கீகாரம் கிடைக்கும்படி வாழ்ந்துகாட்டி ஜெயித்தவர்களின் கதைகள்.
முதல் பக்கங்களில் அழகம்மை என்ற திருநங்கையை உதாரணப்படுத்தி அவர்களின் வாழ்க்கைமுறையை விளக்குகிறார் ஆசிரியர். ஆணாகப் பிறந்த அழகப்பன், தனக்குள்ள பெண் மனதை உணர ஆரம்பித்து, குடும்பமும் சமூகமும் வெறுத்து ஒதுக்க, மும்பைக்குப்போய் தன்போன்றவர்களுடன் அழகம்மையாக அடைக்கலமாகிறார். அங்கு ரீத் எனும் சடங்குமூலம் மூத்த திருநங்கை ஒருவரால் மகளாகத் தத்தெடுக்கப்படுகிறார். உரோமம் பிடுக்கும் சிம்டா கருவி, தண்டுப்பணம், தந்தா என்ற கடைகேட்டல் என்று திருநங்கைகளின் வித்தியாசமான உலகையும் சொல்லாடல்களையும் அறிமுகப்படுத்துகிறார் ஆசிரியர். அதில் அதிரவைக்கும் ஒருவிசயம், நிர்வாணம் எனப்படும் தாயம்மா அறுவை சிகிச்சை. ஆண்தன்மையை நீக்குவதற்காக ஆணுறுப்பை வெட்டியெடுக்கும் சிகிச்சை. மயக்க மருந்தே இல்லாமல் இரத்தத்தையும் வலியையும் நேரடியாக உணரவைக்கும் சிகிச்சை. இறந்து போனால் காளிக்குச் சமர்ப்பணம்.
திருநங்கைகளுக்குச் சாதாரணமாக வாடகை வீடு கிடைப்பதில்லை. கழிவறையைப் பயன்படுத்துவதில் கிடைத்த கசப்பான அனுபவத்தில் எம்.ஏ. படிப்பைப் பாதியிலேயே விட்டவரும் உண்டு. இவர்களைப் அனுபவத்திற்காக நெருங்கி உடல் ரீதியில் தொடர்புகொண்டு ஏமாற்றுபவர்களும் இச்சமுதாயத்தில் உண்டு. மெரீனா கடற்கரையில் நூரி அவர்களின் பாலூற்றும் சடங்கைப் பார்த்து ஆயிரம் ரூபாய் தட்சணை கொடுத்த வில்லன் நடிகர் நம்பியார் போன்றவர்களும் இதே சமுதாயத்தில் உண்டு.

பெரும்பாலும் திருநங்கைகள் விசேசங்களில் சமையல் செய்பவர்களாகவும், ஒப்பாரிக் கலைஞர்களாகவும், கரகாட்டம, மயிலாட்டம், ஒயிலாட்டம், கணியான் கூத்து என்று கிராமியக் கலைஞர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களின் சமூகப் பிரிவுகளும் மதக்கோட்பாடுகளும் வடதென் இந்தியப் பகுதிகளில் வித்தியாசப்படுகின்றன. முகலாயர்கள் காலத்தில் ஆரம்பித்த முக்காடு பழக்கம், அரவான் சரித்திரம் என்று பல தகவல்கள் ஆங்காங்கே கட்டங்களில் எட்டிப்பார்க்கின்றன. பாலுறுப்பு மாற்றலுக்குத் தாயம்மா சிகிச்சைக்குப் பதிலாக Sexual Reassignment Surgery போன்ற நவீன சிகிச்சைகள் சென்னைக்கே வந்துவிட்டன. சகோதரன், தாய் (TAI-Tamil Nadu AIDS Initiative ன் மனசு போன்று திருநங்கைகளுக்காகச் செயல்படும் அமைப்புகளும் பலவுள்ளன.

இவர்களின் பிறப்பிற்கு விதி, கர்மவினை, சாபம், சென்மபாவம் என்ற எதுவும் காரணமில்லை. பாலியல் திரிபைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்கான அனுதாபத்தையோ, அடக்குமுறையையோ இல்லாமல் சகமனிதன் என்ற அங்கீகாரம் மட்டுமே இவர்கள் கேட்பது. ஈரலைக் கெடுக்கும் ஹார்மோன் ஊசிகளுடன் வாழ்ந்துவரும் ஒரு சமூகத்தைப் புரிந்துகொள்ள, நம்மில் சிலருக்கு இருக்கும் Transphobiai உடைத்தெறிய இதுபோன்ற புத்தகங்கள் கண்டிப்பாக உதவும். ஆங்காங்கே பரவிக்கிடக்கும் எழுத்துப்பிழைகளைத் தவிர்த்து, திருநங்கையாகப் பிறப்பதற்கான அறிவியல் காரணங்களை இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்லியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

திருநங்கைகளுக்கு சட்ட அங்கீகாரம், சமூகப் பாதுகாப்பு, சமூக அங்கீகாரம், கல்வி, வேலை வாய்ப்பு கிடைக்காத வரை... திருநங்கைகளை அச்சத்துடனும் அந்நியமாகவும் கண்ணில் விழுந்த துரும்புகளாகவுமே இந்தச் சமூகம் எதிர்கொள்ளும்! உங்கள் பக்கத்து இருக்கையில், ஓர் ஆணோ, பெண்ணோ அமர்ந்து இருந்தால், எப்படி உங்களுக்கு எந்தச் சலனத்தையும் பாதிப்பையும் அது ஏற்படுத்தாதோ, அப்படி ஒரு சக பயணியாக வாழ்க்கைப் பயணத்தில் திருநங்கைகளை எதிர்கொள்ளும் பக்குவத்தையேனும் இப்போதைக்குச் சமூகம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மாற்றம் இனி உங்கள் கையில்...



# ‘அனைவராலும் நேசிக்கப்பட்டவர்’

# முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் பாக்கீர் மாக்கார்



**எஸ்.எல்.சியாத் அஹமட்**
**பாராளுமன்ற நூலகர்**

எமது வரலாற்றில் இடம் பிடித்த தலைவர்களில் ஒருவரான மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் வாழ்க்கை மற்றும் அவரது அரும்பணிகள் பற்றி நினைவுகூர கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கௌரவமும் செல்வாக்கும் நிறைந்த முக்கிய பதவியான சபாநாயகர் பதவியானது பாராளுமன்றமுறைமை நிலவுகின்ற நாடுகளில் ஒரு முக்கிய பதவியாக காணப்படுகின்றது.

1377 பிரித்தானியாவைச் சேர்ந்த ‘சேர் தோமஸ் ஹங்கர்போர்ட்’ என்பவரின் நியமனத்துடன் இச் சபாநாயகர் பதவி தோற்றம் பெறுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இலங்கை அரசியல் நிர்வாகக் கட்டமைப்பில் மூன்றாம் நிலையில் காணப்படும் பதவியே சபாநாயகர் பதவியாகும்.

இத்தகைய பின்னணியில் தோற்றம் பெற்ற சபாநாயகர் பதவியை அலங்கரித்தவர்களில் ஒருவர் தான் மர்ஹூம் பாக்கீர் மாக்கார். மர்ஹூம் பாக்கீர் மாக்கார், பல்வேறு அரசியல் பதவிகளில் சேவையாற்றிய போதிலும், சபாநாயகர் என்ற பதவியைக் கொண்டே பிரபலம் அடைந்தவராக காணப்படுகின்றார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார் இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்றத் தலங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற, மாணிக்கக் கல் வியாபாரத்தில் பெயர்பெற்று, தனக்கேயான கலாசாரங்களையும் பாரம்பரியங்களையும் கொண்ட பேருவளை நகரத்தில் 1917 மே மாதம் 12ஆம் திகதி பிறந்தார்.

அவரின் தந்தை ‘ஹகீம் அலியா மாக்கார்’ சிறந்த வியாபாரியாகவும், ஆயுர்வேத மருத்துவராகவும் பன்முகத் திறமைகளை கொண்டவராகவராகவுமிருந்தார். இவரது தாயார் ரஹிலா உம்மா மாக்கார், கணவரின் பணிகள் மற்றும் மரபுகளைக் காப்பாற்றும் சிறந்த பெண்மணியாகத் திகழ்ந்தார்.

இவர்கள் இலங்கைக்கான அரேபியர் குடியேற்றத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த ஷேக் ஜமாலுதீன்- அல்-மக்தூமியின் வம்சத்தைச் சேர்ந்தவராகளாக இருக்கின்றார்கள். அக்காலத்திலேயே நன்கு கல்வி கற்ற குடும்பமாக இக்குடும்பம் காணப்பட்டது.

இக்குடும்பத்தில் பிறந்த மர்ஹூம் பாக்கீர் மாக்கார் இளம் வயதிலிருந்தே கல்வியில் அக்கறையுடன் இருந்தார். தனது ஆரம்பக்கல்வியை பேருவளையில் உள்ள அல்-பாஸியத்துல் நஸ்ரியா பாடசாலையில் கற்றார். பின்பு 1924ஆம் ஆண்டு, தனது 7ஆவது வயதில், கொழும்பு 12இல் உள்ள சென் செபாஸ்டியன்ஸ் கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்தார். பின்னர் மேன்நிலைக் கல்விக்காக அவர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் இணைந்தார்

**பேருவளைத் தொகுதி, அதிகமாக பெரும்பான்மை சமூகத்தினர் வாழுமிடம் என்றபோதிலும், அங்கு முஸ்லிம்கள் அரசியலில் செல்வாக்குள்ளவர்களாக, இன்றுவரை இருக்க, மர்ஹூம் பாக்கிர் மாக்காரே காரணம் என்றால் அது மிகையாகாது**

**மர்ஹூம் பாக்கிர் மாக்கார் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சேவை செய்த ஒரு திறமையான தலைவராக விளங்கியமையால் 1992இல் இலங்கை அரசாங்கம் அவருக்கு ‘தேசமான்யா’ விருது வழங்கிக் கௌரவித்தது**

மர்ஹூம் பாக்கீர் மாக்காருடைய அரசியல் வாழ்கைக்கும், அத்துறையிலான சாதனைகளுக்கும், அத்திவாரமும், அடிப்படைப் பயிற்சியும் அவர் பயின்ற கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலேயே இடப்பட்டது. இங்கு, அவர் கல்லூரி இதழின் ஆசிரியராகவும், முஸ்லிம் மஜ்லிஸ் தலைவராகவும், தமிழ் இலக்கிய சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டு தனது திறமையை வளர்த்துக் கொண்டார்.

மர்ஹூம் டி.பி.ஜாயா ஸாஹிரா கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் அதே கல்லூரியில் மாணவராகவும், ஆசிரியராகவும் கடமையாற்றியமை அவருக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாகும்.

1940ஆம் ஆண்டில் சீனியர் கேம்பிரிஜ் (Senior Cambridge) தேர்வுகளை முடித்த பாக்கீர் மாக்கார், இலங்கை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். ஆனால், இரண்டாம் உலகப் போர் தொடங்கியதால், அவர் 1942ஆம் ஆண்டு சிவில் பாதுகாப்புச் சேவையில் பணியாற்றத் தொடங்கினார். போருக்குப் பிறகு, மீண்டும் சட்டக் கல்லூரியில் இணைந்து, 1950இல் சட்டத்தரணியாக தேர்ச்சி பெற்று களுத்துறை மாவட்டத்தில் சட்ட சேவையை தொடங்கினார். 1951இல், களுத்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் அரசியல் பயணம் பேருவளை நகரசபையிலிருந்து ஆரம்பமாகின்றது. இவர் 1950இல் பேருவளை நகரசபை உறுப்பினராகப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டு, பின்னர் நகரசபைத் தலைவராகவும் பதவியேற்றார்.

மேலும், பேருவளை நகராட்சி மாநகராட்சியாக மாறிய போது நகராதிபதியாகவும், 1960ஆம் ஆண்டுவரை செயற்பட்டார்.

1960 மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேருவளைத் தேர்தல் தொகுதியில் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஆனால், சில மாதங்களிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால், அவர் மீண்டும் 1960 ஜூலை மாதம் இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தாலும், 1965 தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார்.

1977இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு பேருவளைத் தொகுதியில் அமோக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

அதுமாத்திரமன்றி, அப்போதைய தேசிய அரச பேரவையின் துணை சபாநாயகராகவும் தெரிவு செய்யப்பட்டர். அப்போது சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட கலாநிதி ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் தனது சபாநாயகர் பதவியை இராஜிநாமா செய்தபோது 1978 இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகராக மர்ஹூம் பாக்கீர் மாக்கார் தெரிவு செய்யப்பட்டு 1983ஆம் ஆண்டுவரை பதவிவகித்தார். இவர், இலங்கை பாராளுமன்றக் கட்டடம் ஸ்ரீஜெயவர்தனபுர கோட்டைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டபோது, அதன் முதல் சபாநாயகராகவும் திகழ்ந்தார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் பெற்றிருந்தமையால் பாராளுமன்ற அமர்வுகளை சிறப்பாக வழிநடத்திச் சென்றதோடு பாராளுமன்றத்தின் ஒழுங்கையும் பாரம்பரியத்தினையும் காக்க முக்கிய பங்காற்றினார்,

இவர் பாராளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களினதும் நன்மதிப்பை பெற்றிருந்தார். ஆளும் கட்சியினது பாராட்டை மட்டுமன்றி எதிர்க்கட்சியினதும் பாராட்டைப் பெற்ற ஒரு நேர்மையான சபாநாகராக விளங்கினார்.

இக்காலப்பகுதியில் இவருடைய உத்தியோகபூர்வ வாசஸ்தலமான மும்தாஜ் மஹால் மக்களின் நலன் பேணும் அலுவலகம் போன்று செயற்பட்டதாகக் குறிப்பிடுவர். தினமும் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்த மக்கள் வந்து தங்கள் பிரச்சினைகள் பற்றி சபாநாயகருடன் கலந்துரையாடி அவற்றுக்கு தீர்வும் பெற்றுச் சென்றதாக குறிப்பிடப்படுகின்றது.

பேருவளைத் தொகுதி, அதிகமாக பெரும்பான்மை சமூகத்தினர் வாழுமிடம் என்றபோதிலும், அங்கு முஸ்லிம்கள் அரசியலில் செல்வாக்குள்ளவர்களாக, இன்றுவரை இருக்க, மர்ஹூம் பாக்கீர் மாக்காரே காரணம் என்றால் அது மிகையாகாது.

1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், மர்ஹூம் பாக்கீர் மாக்கார் சபாநாயகர் பதவியில் இருந்து விலகி, அமைச்சராகப் பதவியேற்றார். பின்னர், 1988ஆம் ஆண்டு, அவர் பாராளுமன்றத்தில் இருந்து விலகி, தென் மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். மாகாண சபை முறை இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பின்னர் முதலாவது முஸ்லிம் ஆளுநராக நியமிக்கப்பட்டவரும் இவராவார்.

சமூக சேவையாளரான மர்ஹூம் பாக்கீர் மாக்கார் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறையுள்ளவராகக் காணப்பட்டார்.

இவர் இலங்கை முஸ்லிம் லீக்கின் உப தலைவராக இருந்த காலத்தில் கலாநிதி எம்.சீ.எம்.கலீல் உடன் இணைந்து முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் பாடுபட்டு வந்தார். முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களுக்கு இணையாக கல்வியிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் முன்னேற்றம் காண்பதில் வாலிபர்களின் பங்களிப்பு முக்கியத்துவமானது என்பதை நன்குணர்ந்த அவர் அரசியலில் முஸ்லிம்களின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டுமென்பதற்காக முஸ்லிம் லீக் வாலிப முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

இந்த இயக்கத்தின் மூலம் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் சமூக உணர்ச்சியையும், நாட்டுப் பற்றையும் ஏற்படுத்தி அவர்களுக்குப் புதுத்தெளிவையும், புதுத்தெம்பையும் ஊட்டி இளைய தலைமுறையை உருவாக்குவதில் வெற்றிகண்டார். கிராமப் புற முஸ்லிம் இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சியையும் வழிகாட்டல்களையும் வழங்கி தேசிய தலைவர்களாக வாலிபர்களை உருவாக்கிய ஒரே இயக்கம் இதுவாகும்.

மேலும், முஸ்லிம்களின் உரிமைக் குரல் பொதுமக்களை எய்தவேண்டுமாயின் அவர் தம் பிரச்சினைகளை நாடறியச் செய்ய வேண்டுமென்பதை நன்கறிந்த பாக்கீர் மாக்கார் பத்திரிகைத் துறையிலும் எமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார். ‘தோன்’ என்ற ஆங்கில இதழையும், ‘உதயம்’ என்ற தமிழ் இதழையும் பல வருடங்களாக நடத்தி வந்தார். அவர் தம் அயராத உழைப்பையும், தனது வருமானத்தில் கணிசமான பகுதியையும் முஸ்லிம் வாலிப முன்னணிக்கும், ‘தோன்’ மற்றும் ‘உதயம்’ பத்திரிகைகளுக்குமாக வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்க செயலாகும்.

இது போன்ற பணிகளில் எப்பொழுதும் முன்னின்று உழைக்கும் பண்பினால் இவர் அனைவரது அபிமானத்திற்குமுரியவராகத் திகழ்ந்தார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சேவை செய்த ஒரு திறமையான தலைவராக விளங்கியமையால் 1992இல் இலங்கை அரசாங்கம் அவருக்கு ‘தேசமான்யா’ விருது வழங்கிக் கௌரவித்தது.

தேசமான்ய மர்ஹூம் பாக்கீர் மாக்கார் 1997 செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி தனது 81ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்காரின், அரசியல் வாழ்வை, இவரது மகன் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி இம்தியாஸ் பாகிர் மாக்கார் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம்களிடையே தோன்றிய அருந்தலைவர்களுள் ஒருவராகவும், இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட்ட ஒருவராகவும் திகழ்ந்த மர்ஹூம் பாக்கீர் மாக்காரை நினைவுகூரும் இவ்வேளையில், அவர் தமது கோட்பாடுகளினுள் சிறப்பம்சமாக வற்புறுத்திச் சென்ற “இனங்களுக்கிடையேயான ஒற்றுமை” என்ற பண்பினை எமது வாழ்விலும் பேணிப் பாதுகாப்போம்.

# ‘ஆடு ஜீவிதம்’






திருச்செல்வம் ஜனனீ,
ஊடகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

‘ஆடு ஜீவிதம்’ என்ற திரைப்படத்தை மலையாளத் திரைப்பட இயக்குநர் பிளெஸ்ஸி எழுதி, தயாரித்து 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்டது.

ஏ.ஆர்.ரகுமான் இசையமைப்பில், உருவான ‘ஆடு ஜீவிதம்’ திரைப்படம், பிரித்திவிராஜ், அமலாபால் மற்றும் சுகுமாரின் நடிப்பில் மலையாளம், அரபு ஆகிய இரு மொழிகளிலும் வெளியாகியுள்ளது. இத்திரைப்படம் ஆலப்புழாவைச் சேர்ந்த நஜீப் முகமது என்பவரின் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை மையமாக வைத்து, பென்யாமின் எழுதிய ‘ஆடு ஜீவிதம்’ என்ற நாவலை தழுவி எடுக்கப்பட்ட திரைப்படமாகும்.

சவூதி அரேபியாவில் தனது விருப்பத்திற்கு மாறாக ஆடு மேய்க்கும் வேலையில் அமர்த்தப்பட்ட ஒரு புலம்பெயர்ந்த மலையாளத் தொழிலாளியைப் பற்றிய கதையாகும்.

குதையின் நாயகன் நஜீப் (பிருத்விராஜ்) கும்பகோணத்தில் (தமிழ்பதிவு), கேரளா (மலையாளம்) அம்மா, மனைவியுடன் (அமலாபால்) வாழ்ந்து வருகின்றார். வாழ்க்கையில் எப்படியாவது முன்னேறவேண்டும் என்பதற்காக (வளை குடா நாட்டுக்கு) சவூதி அரேபியாவிற்கு வேலைக்குச் சென்றால் குடும்ப கஷ்டம் மாறும் என நினைக்கிறான். அதன்படி, வீட்டை அடமானம் வைத்து பணம் கொடுத்து வளைகுடா நாடு ஒன்றுக்குச் செல்கிறான். அலுவலக உதவியாளர் பணியை எதிர்பார்த்துச் செல்லும் அவனும் அவன் நண்பன் ஹக்கிமும் (கே.ஆர்.கோகுல்), தொலைதூர பாலை வனத்தில் இருக்கும் வெவ்வேறு மசராவுக்கு (ஆட்டுப்பட்டி) அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அங்கு அவர்களின் கடவுச்சீட்டும் பறித்து வைக்கப்படுகிறது. தொடர்ந்து அடி உதை என கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். இடையே மனைவியின் நினைவலைகள் மற்றும் அங்கு ஆடுகள், ஒட்டகங்களை மேய்த்துச் செல்லும் காட்சி மற்றும் கதாநாயகன் ஆரம்பத்தில் இருக்கும் தோற்றப் பொலிவுக்கும் இடையே இடையே சாப்பாடு தண்ணீர் இல்லாமல் மெலிந்த நிலை இவ்வாறான கொடுமையான சூழலில் சிக்கிக்கொள்ளும் இருவரும் அங்கிருந்து தப்பிக்கப் போராடுகிறார்கள்.

அந்த உயிர் வலிகொடுமையில் இருந்து இருவரும் தப்பித்தார்களா? நஜீபின் குடும்பத்துக்கு என்ன ஆனது? என்பது மீதி கதை.

இரண்டாம் பாதியில் நாயகனும் அவன் நண்பனும் அவர்களைப் போலவே சிக்கிக் கொண்ட ஆபிரிக்கரான இப்ராஹிம் கதிரியின் (ஜிம்மி ஜீன் லூயிஸ்) உதவியுடன் தப்பிச் செல்லும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். உணவும் தண்ணீரும் கிடைக்காமல் நாட்கணக்கில் பாலைவனத்தில் பயணிக்கும் கொடுமையைச் சுற்றியே இரண்டாம் பாதியின் பெரும்பகுதி அமைந்திருக்கிறது.

மசராவிலிருந்து தப்பிச் செல்லும் போது நீண்டநாட்கள் குளிக்காது உடலில் தண்ணீர் பட அழும் நிலை மெலிந்த நிலையில் ஜீன்ஸ் எடுத்து அணிவதற்குச் சாக்கு நூலை வைத்துக் கட்டுவது போன்றன ரசிகர்களின் மனதை நொறுங்க வைக்கிறது. பின்னர் அவசரத்தில் கூட நாயகன் ஆடுகளுக்கும் ஒட்டகங்களுக்கும் உணவளித்து விட்டுச் செல்வதுபோன்ற உணர்வுப்பூர்வமான தருணங்கள் மனதைத் தொடுகின்றன.

வாழ்க்கையில் முன்னேற வெளிநாடுகளுக்குச் செல்லும் பலர் போலி முகவர்களால் ஏமாற்றப்பட்ட கதைகள் ஏராளம். இப்படிச் சிக்கிக் கொள்பவர்களின் கொடுமையான வேதனையைப் பதிவுசெய்யும் உயிர்ப்பு மிக்கப் படைப்பு. படத்தின் பெரும் பகுதி பாலைவனத்தில் தனித்து விடப்பட்ட நாயகனின் போராட்டம் மனதை நெகிழ வைக்கிறது. கதாநாயகன் எப்பொழுது தப்பித்துச் செல்வான் என்ற எண்ணப்போக்கு படம் முழுதும் பயணிக்கிறது.

ஏ.ஆர்.ரஹ்மானின் பாடல்களும் பின்னணி இசையும் படத்தைத் தாங்கி நிற்கின்றன. மொழி தெரியாத நாட்டில் பாலைவனத்தின் பரந்து விரிந்த பிரம்மாண்டத்தில் திக்குத் தெரியாமல் அலையும் பரிதவிப்பைப் பார்வையாளர்களுக்கும் கடத்திவிடுகிறது சுனில். கே.எஸின் ஒளிப்பதிவு. கர் பிரசாத்தின் படத்தொகுப்பு முதல் பாதி திரைக்கதையை ரசனையாக நகர்த்திச் செல்ல உதவியிருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் ஒரு தனி மனிதனின் ஜீவமரணப் போராட்டத்தை உயர்தரமான பதிவாகத் திரைப்படமுள்ளது.

# துல்கர் சல்மானின் காந்தா






இயக்குநர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் ‘லக்கி பாஸ்கர்’ என்ற திரைப்படத்தில் நடிகர் துல்கர் சல்மான் நடித்து முடித்துள்ளார். இப்படத்தில் நாயகியாக மீனாட்சி சௌத்ரி நடித்துள்ளதுடன், ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

இப்படம் எதிர்வரும் அக்டோபர் 31ஆம் திகதி வெளியாக உள்ள நிலையில், துல்கர் அடுத்து நாயகனாக நடிக்கும் படத்தின் பூஜை ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

காந்தா எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை செல்வராஜ் செல்வமணி இயக்குகிறார். பாக்யஸ்ரீ போர்ஸ் நாயகியாகவும் நடிகர் சமுத்திரகனி முக்கிய கதாபாத்திரத்திலும் நடிக்கின்றனர். ராணா டகுபதி மற்றும் துல்கர் சல்மான் இணைந்து தயாரிக்கின்றனர்.

# ‘கோட்’ ஓடிடி ரன்னிங் டைம் அதிகரிப்பு?




தளபதி விஜய் நடித்த ‘கோட்’ திரைப்படத்தின் ரன்னிங் டைம் சுமார் 3 மணி நேரம் என்ற நிலையில், ஓடிடியில் ரிலீஸ் ஆகும்போது இதைவிட அதிகமான ரன்னிங் டைம் இருக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தளபதி விஜய் நடிப்பில், வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவான ‘கோட்’ திரைப்படம் அண்மையில் வெளியாகி விமர்சனங்களை பெற்று வசூலையும் வாரி குவித்து வருகிறது.

இந்த நிலையில், 3 மணி நேரமே அதிக ரன்னிங் டைம் என்று ‘கோட்’ படத்திற்கு சில விமர்சனங்கள் எழுந்திருந்த நிலையில் தற்போது ஓடிடியில் வெளியாகும் போது 3 மணி நேரம் 40 நிமிடங்கள் ரன்னிங் டைம் உள்ளது என்று கூறப்படுகிறது.

ஏற்கெனவே விஜய், பிரசாந்த், மோகன் சம்பந்தப்பட்ட காட்சிகள் சிறப்பாக இருந்தாலும் நீளம் கருதி நீக்கப்பட்டதாக இயக்குநர் வெங்கட் பிரபு பேட்டி அளித்திருந்தார்.

இந்த நிலையில், தற்போது ஓடிடியில் பார்க்கும்போது அந்த காட்சிகள் எல்லாம் இருக்கும் என்பதால் விஜய் ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.



# சூர்யாவுடன் மீண்டும் பிரகாஷ்ராஜ்

கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் நடிகர் சூர்யா தனது 44ஆவது படத்தில் நடித்து வருகின்றார். சந்தோஷ் நாராயணன் இசையமைக்கின்றார்.

இந்தப்படத்தில் பூஜா ஹெக்டே, ஜெய்ராம், ஜோஜூ ஜார்ஜ், கருணாகரன், சுஜித் ஷங்கர் உள்ளிட்டோர் இணைந்து நடிக்கின்றனர். ஏற்கெனவே இதன் இரண்டு கட்ட படப்பிடிப்புகள் நிறைவு பெற்றது.

இந்த நிலையில், இந்த படத்தில் மற்றொரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்க நடிகர் பிரகாஷ்ராஜ் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிங்கம், ஜெய் பீம் ஆகிய படங்களை தொடர்ந்து இப்போது மீண்டும் சூர்யா உடன் பிரகாஷ் ராஜ் நடிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேப்டனுக்கு குரல் கொடுத்த
# பிரபல ஹீரோ




தளபதி விஜய் நடித்த ‘கோட்’ திரைப்படத்தில் கேப்டன் விஜயகாந்த் ஒரு சில காட்சிகளில் தோன்றும் நிலையில், அவருக்கு பின்னணி குரல் கொடுத்தது தமிழ் திரை உலகின் பிரபல ஹீரோ என்ற தகவல் வெளியாகியுள்ளது.

‘கோட்’ படத்தில் கேப்டன் விஜயகாந்த் காட்சிகள் தோன்றும் போது திரையரங்கமே அதிரும் நிலையில், தற்போது கேப்டன் விஜயகாந்த் கேரக்டருக்கு பின்னணி குரல் கொடுத்தவர் தமிழ் திரையுலகின் இளம் ஹீரோ மணிகண்டன் என்பது தெரியவந்துள்ளது.

மணிகண்டன் ஏற்கெனவே மிமிக்ரி கலைஞர் என்பதும் பல மேடைகளில் அவர் விஜயகாந்த் உட்பட பல பிரபலங்களின் குரல்களில் பேசி உள்ளார்.

அந்த வகையில், மிகவும் பொருத்தமாக அவர் ‘கோட்’ திரைப்படத்தின் விஜயகாந்த் கேரக்டருக்கு வாய்ஸ் கொடுத்ததையடுத்து, அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகிறன.




# சத்யம் சுந்தரம்




‘96’ பட இயக்குநர் பிரேம் குமார் இயக்கத்தில் நடிகர் கார்த்தி ‘மெய்யழகன்’ என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இதில் அரவிந்த் சாமி, ஸ்ரீ திவ்யா, ஸ்வாதி கொண்டே ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி இந்தத் திரைப்படம் வெளியாக உள்ள நிலையில், திடீரென இதன் டீசர் ஒன்றை வெளியிட்டனர்.

அத்துடன், விநாயகர் சதுர்த்தி தினத்தை முன்னிட்டு மெய்யழகன் பட தெலுங்கு பதிப்பிற்கு ‘சத்யம் சுந்தரம்’ என தலைப்பு வைத்துள்ளதாக படக்குழுவினர் அறிவித்தனர்.

கார்த்தி படங்களுக்கு எப்போதும் ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



மூன்றாவது டெஸ்டில்

# இங்கிலாந்தை தோற்கடித்த இலங்கை

இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டை இலங்கை வென்றது. 3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் இங்கிலாந்து வென்று ஏற்கெனவே தொடரைக் கைப்பற்றிய நிலையில், ஓவலில் வெள்ளிக்கிழமை (06) ஆரம்பித்து திங்கட்கிழமை (09) முடிவுக்குவந்த இப்போட்டியை வென்றதன் மூலம் தொடரை 1-2 என்ற ரீதியில் இலங்கை முடித்துக்கொண்டது.

ஸ்கோர்விவரம்: நாணயச்சுழற்சி: இலங்கை

இங்கிலாந்து: 325/10 (துடுப்பாட்டம்: ஒலிபோப் 154, பென்டக்கெட் 86 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிலான்ரத்னாயக்க 3/56, தனஞ்சயடிசில்வா 2/18, விஷ்வபெர்ணாண்டோ 2/46, லஹிருகுமார 2/97, அசிதபெர்ணாண்டோ 1/88)

இலங்கை: 263/10 (துடுப்பாட்டம்: தனஞ்சய டி சில்வா 69,பதும்நிஸங்க 64, கமிந்து மெண்டிஸ் 64 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஒலிஸ்டோன் 3/35, ஜொஷ்ஹல் 3/53, கிறிஸ்வோக்ஸ் 2/42, ஷொய்ப்பஷிர் 1/37)

இங்கிலாந்து: 156/10 (துடுப்பாட்டம்: ஜேமிஸ்மித் 67, டான்லோரன்ஸ் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: லஹிருகுமார 4/21, விஷ்வபெர்ணாண்டோ 3/40, அசிதபெர்ணாண்டோ 2/49, மிலான்ரத்னாயக்க 1/43)

இலங்கை: 219/2 (துடுப்பாட்டம்: பதும்நிஸங்க ஆ.இ 127, குசல்மெண்டிஸ் 39, அஞ்சலோமத்தியூஸ் ஆ.இ 32ஓட்டங்கள்.
பந்துவீச்சு:குஸ்அட்கின்ஸன் 1/44, கிறிஸ்வோக்ஸ் 1/52)



வவுனியா வை2கேயுடனான சிநேகபூர்வ போட்டியில்

# புத்தளம் சோல்டன் வென்றது

எம்.யூ.எம்.சனூன்

வவுனியா வை2கே கால்பந்தாட்ட அணியுடன் வவுனியா விவேகானந்தா விளையாட்டரங்கியில் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்ற சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் புத்தளம் சோல்டன் கால்பந்தாட்டக் கழகம் வென்றது.

சோல்டன் சார்பாக, ஏ.எம்.ஜெர்ஹீன் இரண்டு கோல்களையும், ஐ.எப்.நிப்ராஸ் மற்றும் எம்.எஸ்.எம்.அஹ்னப் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். வை2கே அணி சார்பாகப் பெறப்பட்ட கோலை முஹம்மது ஹபீஸ் பெற்றிருந்தார்.



# உலக சிலம்பம் போட்டியில் இலங்கை மாணவிகள் மூவர்

அஸ்ஹர் இப்றாஹிம்

இந்தியாவின் கேரளாவில் நடக்கவிருக்கும் உலக சிலம்பம் போட்டியில் கண்டி, தெல்தோட்டை மலைமகள் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியான செல்வி எம்.இந்துஷா மற்றும் அக்கல்லூரியில் கல்வி பயிலும் ஐ.சௌஜன்யா, கண்டி, கலஹா ராமகிருஷ்ணா மத்திய கல்லூரியின் பழைய மாணவி பிரியங்கா கல்யாணி ஆகிய மூன்று மாணவிகளும் பங்கேற்கவுள்ளனர்.

மாஸ்டர் தயா பெரேரா, மாஸ்டர் சிவராஜா ஆகிய இருவரின் தலைமையில் நடைபெறும் சோடோக்கான் கராத்தே பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்று வரும் இவர்கள் ஸ்ரீலங்கா சிலம்பம் சம்மேளனத்தின் தலைவர் மாஸ்டர் திருச்செல்வம் மற்றும் செயலாளரானா மாஸ்டர் தினேஷ் மாஸ்டர் சிவராஜாவின் தலைமையில் மேற்குறிப்பிட்ட மூன்று மாணவர்களும் பங்குபெறும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

கிழக்கு மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில்

# முதலிடம் பெற்றார்



நியாஸ் ஆதம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியானது மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் சனிக்கிழமை (07) நடைபெற்றபோது, 18 வயதுக்குட்பட்டோருக்கான நீளம் பாய்தலில் பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலய எம்.எச்.எம்.நிப்றான் முதலாமிடத்தைப் பெற்றார்.

6.43 மீற்றர் தூரம் பாய்ந்து மூன்றாண்டுகளில் மூன்றாவது முறையாக முதலிடத்தை பெற்றுக்கொண்டார்.

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான

# இந்தியக் குழாமில் யஷ் தயால்



பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான இந்தியக் குழாமில் புதுமுக இடதுகை வேகப்பந்துவீச்சாளர் யஷ் தயால் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, றிஷப் பண்ட், லோகேஷ் ராகுல் ஆகியோர் குழாமுக்கு மீளத் திரும்பியுள்ள நிலையில் காயத்திலிருந்து குணமடைந்து வரும் மொஹமட் ஷமி குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), யஷஸ்வி ஜைஸ்வால், ஷுப்மன் கில், விராட் கோலி, லோகேஷ் ராகுல், ஸஃப்ராஸ் கான், றிஷப் பண்ட் (விக்கெட் காப்பாளர்), துருவ் ஜுரேல், இரவிச்சந்திரன் அஷ்வின், இரவீந்திர ஜடேஜா, அக்ஸர் பட்டேல், குல்தீப் யாதவ், மொஹமட் சிராஜ், ஆகாத் தீப், ஜஸ்பிரிட் பும்ரா, யஷ் தயால்.

பீஜிங்

ரஷ்யா, சீனாவுடன்

# கைகோர்க்கும் இந்தியா



நிலவில் அணு மின் நிலையம் அமைக்க ரஷ்யா, சீனா உடன் இணைந்து இந்தியா செயல்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ரஷ்யாவில் அணு சக்தி கழகத்தை (ரோசாட்டம்) மேற்கோள் காட்டி இத்தகவல் வெளியாகி உள்ளது.

நிலவு குறித்த ஆராய்ச்சியில் இந்தியா மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. இதற்காக சந்திரயான் விண்கலத்தை, நிலவின் தென் பகுதியில் தரையிறக்கி இந்தியா சாதனை படைத்தது. அதேபோல் ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகளும் நிலவு குறித்த ஆராய்ச்சியில் மும்முரம் காட்டி வருகின்றன. அங்கு நிரந்தரமாக ஆய்வுக்கூடத்தை அமைக்க முயற்சி செய்கின்றன.

இதற்காக சீனாவுடன் ரஷ்யா கைகோர்த்துள்ளது. இரு நாடுகளின் திட்டப்படி, 2035 முதல் 2045க்குள் படிப்படியாக இந்த ஆய்வு மையத்தை உருவாக்கிவிட இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

இந்நிலையில், இந்த மையத்திற்கு மின்சாரம் வழங்க ஏதுவாக நிலவில் அணுமின் நிலையம் ஒன்றை உருவாக்க ரஷ்யா முயற்சி செய்து வருகிறது. 2040க்குள் இந்த அணுமின் நிலையத்தை உருவாக்க திட்டமிட்டுள்ள ரஷ்யா, மிகவும் சிக்கலான இந்த திட்டத்தில் மனிதர்கள் பயன்படுத்தப்பட மாட்டார்கள் என அறிவித்துள்ளது. ரஷ்யாவின் முயற்சியில் இணைய சீனா ஆர்வம் காட்டி வரும் நிலையில், இந்தியாவும் இணைய விரும்புவதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டாக்கா

# ஹசீனாவை நாடு கடத்த ஏற்பாடு




பங்களாதேசில் கடந்த ஜூலை முதல் ஆகஸ்ட் மாதம் வரை நடந்த மாணவர் போராட்டத்தால் பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா பாதுகாப்பு கேட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதைத் தொடர்ந்து இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றச்சாட்டின் கீழ் ஹசீனா உட்பட 9 பேர் மீது பங்களாதேஷின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் கடந்த மாதம் விசாரணையை தொடங்கியது.

இந்நிலையில், தீர்ப்பாயத்தின் தலைமை வக்கீல் தாஜூல் இஸ்லாம் அளித்த பேட்டியில், "தீர்ப்பாயம் மீண்டும் கூடும் போது, ஷேக் ஹசீனா உள்ளிட்டோருக்கு கைது வாரண்ட் பிறப்பிக்க வலியுறுத்துவோம். அதைத் தொடர்ந்து அவரை இந்தியாவிலிருந்து நாடு கடத்தி பங்களாதேஷ் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றார்.

லண்டன்

6 வயது சிறுமியின்

# அபார சாதனை



மொரோக்காவில் உள்ள 13 ஆயிரம் அடி உயரம் கொண்ட மலைச்சிகரம் மீது தந்தையுடன் சேர்ந்து ஏறி 6 வயது சிறுமி சாதனை படைத்துள்ளார்.

மொரோக்காவில் உள்ள அட்லஸ் மலைத்தொடரில் உள்ள தொபுக்கல் மலைச்சிகரம் வடக்கு ஆபிரிக்காவின் உயரமான மலைச்சிகரமாக கருதப்படுகிறது. இது 13 ஆயிரம் அடி உயரம் கொண்டது.

பிரிட்டனைச் சேர்ந்த செரன் பிரைஸ் என்ற 6 வயது சிறுமி, இதன் மீது ஏறி சாதனை படைத்துள்ளார். குழந்தையாக இருந்தபோது, தன்னை காப்பாற்றிய மருத்துவமனைக்கு நிதி திரட்டுவற்காக இச்சாதனையில் ஈடுபட்டார். அவருக்கு துணையாக தந்தை கிளைனும் உடன் சென்றுள்ளார்.

இதேசமயம், மற்றொரு மருத்துவமனைக்காக நிதி திரட்டுவதற்காக ஐரோப்பாவின் மிக உயரமான பிளான்க் மலைச்சிகரத்தில் ஏறவும் இவர்கள் இருவரும் முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், இது தொடர்பாக பிளைன் கூறுகையில், "மொரோக்காவில் வெப்பநிலை தான் பெரிய சவாலாக இருந்தது. மலை மீது ஏறியதும் சூழ்நிலை மொத்தமாக மாறியது. எங்களின் முயற்சியை சமூகவலைத்தளத்தில் பின் தொடர்ந்தவர்கள் அனைவரும், பாராட்டு தெரிவித்தனர். இதற்காக ஒரு ஆண்டு கடும் முயற்சி செய்தோம்" என்று கூறினார்.

மங்களூர்

தாயை காப்பாற்ற

# ஆட்டோவை தூக்கிய 14 வயது சிறுமி



மங்களூர் அருகே தாய் மீது கவிழ்ந்த ஆட்டோவை தனி ஒருத்தியாக 14 வயது சிறுமி ஒருவர் தூக்கி காப்பாற்றிய காணொளி வைரலாகி வருகிறது.

இது பற்றி மேலும் தெரியவருகையில், "ராஜரத்னபுரா பகுதியைச் சேர்ந்த சேத்னா எனும் தாயொருவர், தனது 14 வயதான மகளை மேல்வகுப்பிலிருந்து அழைத்து வருகையில், எதிர்பாராத விதமாக அவர் மீது ஆட்டோ ஒன்று சாய்ந்துள்ளது.

இதைக் கண்ட அச்சிறுமி, சிறிதும் பதறாமல் தீரத்துடன் தனியாளாக அந்த ஆட்டோவை அப்படியே தூக்கி நிறுத்தி தாயை காப்பாற்றினார்.

ஆட்டோவை தூக்கிய போது, அதனுள் இருந்த சிலர், காயங்களுடன் பீதியில் உள்ளே இருந்து எழுந்து தப்பித்துச் சென்றனர். பின்னர் அனைவரும் ஒன்று சேர்ந்து கீழே விழுந்த சேத்னாவை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

14 வயது மாணவியின் இந்த வீரதீர செயல், அங்கிருந்த சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், குறித்த காணொளி சமூகவலைத்தளங்களில் வெளியானதையடுத்து, தைரியமாக சமயோசித புத்தியுடன் செயல்பட்ட அந்த சிறுமிக்கு பலரும் வாழ்த்துப் பதிவுகளை வெளியிட்டு வருகின்றனர்.

புதுடெல்லி

குரங்கு அம்மை தொற்று

# தேவையற்ற அச்சத்தை தடுக்க நடவடிக்கை




"குரங்கு அம்மை தொற்று குறித்து பொதுமக்களிடையே தேவையற்ற அச்சத்தை தடுக்க வேண்டியது அவசியம்" என மாநில அரசிற்கு மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

குரங்கு அம்மை பரவல் தடுப்புக்காக உலக சுகாதார நிறுவனம் சர்வதேச அளவிலான சுகாதார அவசர நிலையை அறிவித்தது. இதனால் உலகம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, குரங்கு அம்மை பாதிப்பு இருந்த நாட்டுக்கு சென்று, சமீபத்தில் இந்தியா திரும்பிய நபர் ஒருவருக்கு அந்நோய் தொற்றுக்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டு, அவர் தனிமைப்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சையில் இருக்கிறார்.

இந்நிலையில், "குரங்கு அம்மை தொற்று பாதிப்பை உன்னிப்பாக கவனித்து வருகிறோம்" என மாநில அரசுகளுக்கு மத்திய சுகாதாரத்துறை கடிதம் எழுதி உள்ளது.

கடிதத்தில் கூறியிருப்பதாவது, "குரங்கம்மை நோய் ஏற்பட்டால் உயிரிழப்பை தடுப்பதற்கு நடவடிக்கைகளை தீவிர படுத்த வேண்டும். மாவட்ட மருத்துவமனைகளில் சுகாதார துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். அதேசமயம், நோய் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் மீது தனி கவனம் செலுத்த வேண்டும். அதுபோல், மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தும் வசதிகளை ஆய்வு செய்வதோடு, தேவையான உபகரணங்கள், மருந்துகள் கை இருப்பில் உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், குரங்கு அம்மை நோய் சூழலை மத்திய சுகாதார அமைச்சகம் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. பொதுமக்களிடையே தேவையற்ற அச்சம் ஏற்படுவதை தடுக்க வேண்டியது அவசியம்" இவ்வாறு மத்திய அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 10, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.